மில்க் வைற்
நீல சோப்
★ பட்டு
★ பருத்தி
★ நைலோன்
துணிகளை
பிரகாசமாக சலவை செய்கிறது

Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

# ஈழநாடு வார மலர்.

தேசிய தினசரி
மலர் 8

National Tamil Daily
இதழ் 207

பராபவ ஆவணி 21 ஜ:அவ் 20 (6-9-66) செவ்வாய்க்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

## சட்டவிரோதக் குடியேற்றம்

# தடுப்பு நடவடிக்கை தீவிரமடையும்

## 6 மாதத்தில் 250 பேர் கைது!

### தினசரி 30 பேர் வடக்கே இறங்குவதாக அறிக்கை

யாழ்ப்பாணம், செவ். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களின் தொகை கடந்த சிலமாதகாலமாக துரிதவேகத்தில் அதிகரித்திருக்கிறதென்று உயர்தர பொலிஸ் இராணுவ அதிகாரிகளின் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு சட்டவிரோதமாக வருபவர்கள் குறிப்பாக வடக்குப்பகுதியின் கரையோரமாகவே நாட்டுக்குள் நுழைகின்றனர் என்றும் தினசரி 20 முதல் 30 சட்டவிரோதக்காரர்கள் வடமாகாண கரையோரப்பகுதியில் இறங்குகின்றனர் என்றும் இந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கரையோரப் பகுதிகளில் படகுகள் மூலமாக வந்து இறங்கும் சட்டவிரோதக்காரர்களில் மிகவும் குறைவானவர்களையே ரோந்துப்

(12-ம் பக்கம் பார்க்க)

## கார் இறக்குமதியாகாததால் எம்.பி.க்கள் கடும் கோபம்

கொழும்பு, திங்கள். ஜனப்பிரதிநிதிகள் சபையில் முக்கியமான விஷயங்கள் வாக்கெடுப்புக்கு வரும்போது தாம் சபையில் பிரசன்னமாயிருக்காது விடப் போவதாக சில எம். பி.க்கள் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

தமக்கென கார்கள் இறக்குமதி செய்யப்படுவதில் இன்னமும் அரசாங்கம் சரியான முடிவு செய்யாததைத் தொடர்ந்தே இவர்கள் இவ்வித 'வேலைநிறுத்த' நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகத் தெரிகிறது.

இவர்களில் சிலர் தமக்கென கார்கள் இறக்குமதி செய்யப்படும் என்ற நம்பிக்கையில் தாம் தம்மிடமிருந்த கார்களை விற்றுவிட்டதாகவும் சிலர் புதுக்காரை வாங்குவதற்காக கடன் எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இவ்விதம் தாம் செய்துள்ள சில ஏற்பாடுகள் வீணாகி விட்டதாகத் தாம் கருதுவதாக இந்த எம். பி. க்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க எம். பி. க்களே இவ்விதம் அதிருப்தியடைந்துள்ளனர்.

## 103-ம், 104-ம் இலக்க துணிக் கூப்பன்கள்

### இவ்வாண்டு இறுதிவரை செல்லுபடி

கொழும்பு, செவ். அரிசிநிர்யோகத்துக்கான புதிய 23-வது தொடர் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் இம்மாதம் 12-ம் திகதி தொடக்கம் பாவனைக்குவருகின்றது. பழைய பங்கீட்டரிசிப் புத்தகங்களில் உள்ள 103-ம், 104-ம் இலக்கத் துணிக்கூப்பன்களைப் பாவனையாளர் இவ்வாண்டு இறுதிவரை பாவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பங்கீட்டுப்புத்தகங்கள் பெறுவதற்குப் பாவனையாளர் பழைய பங்கீட்டுப் புத்தகங்களின் மேலட்டையை மாத்திரம் சமர்ப்பித்தால் போதும். எஞ்சியுள்ள பகுதியை அவர்கள் தாமே தம்முடன் வைத்துக் கொள்ளலாம்.

பழைய பங்கீட்டுப் புத்தகங்களில் உள்ள 103-ம், 104-ம் இலக்கத்துணிக் கூப்பன்கள் ஏற்கனவே உபயோகிக்கப் பட்டிருக்காவிடில், பாவனையாளர் அவற்றைப் பாவித்து இவ்வாண்டு இறுதி வரை துணி வாங்கலாம்.

ஆ[illegible]ப் பழைய கூப்பன்களில் வாங்கும் போது, அடையாளத்துக்காகப் பாவனையாளர் தமது புதிய அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தைக் காட்ட வேண்டும்.

புதிய அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தில் துணிகள் எதுவும் வாங்க முடியாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரண்ட வட பகுதியைச் சோலைவனமாக்குவோம்!

### புத்தளத்தில் அமைச்சர் சி. பி. டி. உறுதி

புத்தளம், திங்கள். "1956இல் இருந்து 1965 வரையிலான ஒரு வகுப்புவாத-இனபேத சகாப்தத்திலிருந்து-ஒரு புதிய பொற்காலத்தில் நாம் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். இந்நாட்டு சிறுபான்மைமக்களும் 'இது எங்கள் நாடு' என்று உரிமையுடனும் பெருமையுடனும் கூறிக் கொள்ளக்கூடியதான ஒரு பொற்காலத்தில் நாம்வாழ்வதையிட்டுப் பெருமையடைவோம். சாதிமதமொழி வேற்றுமையற்ற புனிதமான ஒருஈழத்திருநாட்டை உருவாக்கிய சிற்பி, தேசிய அரசாங்கப்பிரதமர் எங்கள் டட்லி சேனநாயக்கா என்றால் அது மிகையாகாது".

புத்தளம் நெடுங்குளம் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உள்நாட்டு அமைச்சர் டாக்டர்

(12-ம் பக்கம் பார்க்க)

## செங்காவலர் இயக்கத்துக்கு சீனாவில் பலத்த எதிர்ப்பு

### போலந்து, யூகோஸ்லேவியா தூதுவர்களைத் திருப்பி அழைத்தன

பீகிங், செப். 5. சீனாவில் செங்காவலரின் இயக்கத்துக்கு எதிர்ப்புவலுவடைந்து வருகிறது. அவசியமென்றால் செங்காவலருக்கு உதவியளிக்கப் பீகிங் அரசாங்கம் துருப்புக்களை உதவ முன்வருமென இங்கு அறிவிக்கப்பட்டது நாட்டில் செங்காவலர் இயக்கத்துக்கு எதிர்ப்பு வலுவடைந்துவருவதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

இவர்களது நடவடிக்கைகளை ரஷ்யாவும் பலமாகக் கண்டிக்க முற்பட்டுள்ளது. இவர்கள் பீகிங்கிலுள்ள கம்யூனிஸ்ட் நாடுகளின் தூதரகங்களுக்குமுன் நடாத்திய ஆர்ப்பாட்டங்கள் காரணமாக, போலந்து, யூகோஸ்லேவியா ஆகிய இரு நாடுகளும் தமது தூதராலயப் பொறுப்பதிகாரிகளைத் தமது நாடுகளுக்குத் திருப்பி அழைத்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் வானொலி

### இவ்வார நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ். இலங்கை வானொலி இவ்வாரம் யாழ்ப்பாணத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அவற்றை ஒலிபரப்ப ஒழுங்கு செய்துள்ளது.

இம் மாதம் 8-ந் திகதி மாலை நல்லூர் யுனைட்டட் கிறிஸ்தவ பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் தேசிய லொத்தர் சபையின் 106-வது சீட்டிழுப்பு முடிவுகளை வானொலி ஒலிபரப்பும்.

இம்மாதம் 13-ந் திகதிநல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நிகழ்ச்சிகளை காலை 7-45 தொடக்கம் 10-30 மணிவரையும் பின்னர் பிற்பகல் 1-30மணி தொடக்கம் 5-30 மணிவரையும் நேர்முகவர்ணனையாக ஒலிபரப்பும். 14-ந் திகதி தீர்த்தத் திருவிழா நிகழ்ச்சிகள் நேர்முகவர்ணனை பிற்பகல்4-30தொடக்கம் மாலை 6 மணிவரை ஒலிபரப்பப்படும்.

இம்மாதம் 15-ந் திகதி மாலை 5-30 தொடக்கம் 8-30மணிவரையாழ்ப்பாண நகர மண்டபத்தி[illegible]

(12ம் பக்கம் [illegible])

## ராதாகிருஷ்ணனின் 78வது பிறந்ததினம்

புதுடில்லி, செப். 5. இந்திய ராஷ்டிரபதியின் 78வது பிறந்ததினம் நேற்று ஆசிரியர்தினமாக பாரதமெங்கும் கொண்டாடப்பட்டது.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி உப ஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுசேன் உட்படப் பல தலைவர்கள் டாக்டர்ராதாகிருஷ்ணனை நேரில் சந்தித்துத்தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## முன்னாள் எம். பி.யி... இறுதி சடங்கு

களுவாஞ்சிக்குடி, திங்கள். நேற்று முன்தினம் காலமான முன்னாள் பட்டிருப்பு எம். பி.யும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் உதவி தொழில் அமைச்சராகக் கடமையாற்றியவருமான திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கத்தின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்றன. பிரமுகர்களும், அரசியல் வாதிகளும் [illegible]

## வியட்னாமில் சமாதானத்தையே நாம் விரும்புகிறோம்

### பாரதத்தில் இந்தோனேஷிய வெளிவிவகாரமந்திரி

புதுடில்லி, செப். 5. பாரதத்துக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையே பொருளாதார, கலாச்சாரத் துறையில் நெருங்கிய தொடர்புகளை வளர்க்க இந்தோனேஷியா விரும்புவதாக இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் ஆதாம் மலிக் இங்கு நிருபர்களுக்களித்த பேட்டியில் கூறினார்.

### வியற்னாம்

வியற்னாமில் சமாதானம் ஏற்படுவதையே பாரதமும் இந்தோனேஷியாவும் விரும்புகின்றன என்றும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் ஆதாம் மலிக், பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் 45 நிமிடங்கள்வரை சர்வதேச நிலைமைபற்றியும், இருநாடுகளுக்குமிடையேயுள்ள பொருளாதார, கலாச்சாரத்தொடர்புகள் பற்றியும் பேச்சு வார்த்தை நடத்தினார்.

தென்கிழக்காசிய நாடுகளிடையே பிராந்தியத்தொடர்பு ஏற்படுத்தி, அந்நாடுகளுக்கிடையே நெருங்கிய பிணைப்பை உண்டாக்க வேண்டிய அவசியத்தையும் டாக்டர் மலிக் வலியுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரசாரம் அரசியல்நிருபர்

# அதிகார வர்க்கத்தின் சதிகாரச் செயல்

## நாகநாதனின் குரல் நிலைமையை மாற்றுமா?

வரவு-செலவுத் திட்டம் ஷரத்து வாரியாக பரிசீலனை செய்யப்பட்டு மூன்றாவது தடவையாகவும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேறி விட்டது.

கமிட்டி நிலையில் வரவு—செலவுத்திட்டம் ஒவ்வொரு அமைச்சின் மான்யத்தையும் ஷரத்துவாரியாகப் பரிசிலனை செய்கையில் அந்தந்த அமைச்சினதும், அந்தந்த அமைச்சின் இலாகாக்களினதும் குறைநிறைகள்பற்றி அங்கத்தவர்கள் எடுத்துக் கூறுவதுடன் குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்துவதற்கான யோசனைகளையும் தெரிவிப்பர்.

சென்ற வாரம் நீதிஅமைச்சின் மான்யம் பரிசீலனை செய்யப்படுகையிலும் சில முக்கியமான அம்சங்களும் சுவையான சம்பவங்களும் சிறந்த கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

சிங்களம் மட்டும் சட்டத்தை நாடு முழுவதும் அமுல்நடத்த[illegible]டுமென்று உண்மை[illegible]தேசிய ஐக்கியம் ஒரு மொழியின் மூலமே ஏற்படுமென்று "ஒரு மொழி ஒரு நாடு" என்ற கொள்கையைக் கொண்டுள்ள எதிர்க்கட்சி அங்கத்தினர் சிலர் கூறிய கருத்துக்களுக்கு நல்லூர் எம். பி. யும் தமிழரசுக்கட்சித் தலைவருமான டாக்டர் இ. எம். வி. நாகநாதன் சரியான விளக்கமும் பதிலும் கொடுத்தார்.

நீதிமன்ற அலுவல்களை சிங்களத்தில் நடைபெறுவதற்கு முன்னைய அரசாங்கம் நிறைவேற்றிய மசோதாவை அமுல்நடத்த வேண்டுமென ஹபரதுவ எம். பி. குறிப்பிட்டதற்கு டாக்டர் நாகநாதன் பதிலளிக்கையில் அந்த மசோதாவின் விளைவுதான் நாடு பொருளாதாரத்தில் பின் தங்கியதற்குக் காரணமென்றும் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகள் செய்ததுபோல் சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட, சுதந்திர இலங்கையில் முயற்சிசெய்யக் கூடாதென்றும் சரியாகப் பதில்சொன்னார்.

சிங்களம் மட்டும் சட்டத்தைக்கொண்டுவந்து பின்னர் "மட்டும்" என்றதை நீக்கி தமிழ்மொழியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகமொழியாக இருக்க திருத்தமசோதா கொண்டுவந்த முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற



திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் செயலைப்பற்றி நீதிமன்ற மொழி மசோதாவையும் திருத்த வேண்டுமென்று டாக்டர் நாகநாதன் சுட்டிக்காட்டியதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### சிங்களத்தை ஏற்றோம்

"சிங்களத்தை இந்நாட்டின் உத்தியோக மொழியாக நாம் ஏற்றுக்கொண்டோம்; ஆனால் தமிழ்மொழி வடக்கு—கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகவும் இந்நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் தமிழ்மொழியை நியாயமான அளவு உபயோகிக்க முடியுமென்பதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று தமிழரசுக் கட்சித் தலைவர், சிங்களத்தை உத்தியோக மொழியாக ஏற்றுக்கொண்டதற்கு சரியான விளக்கம் கொடுத்தார்.

### தமிழ்மொழிச் சட்ட விதிகள் அமுல்

தமிழ்மொழிச் சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்டு பல மாதங்களாகியும் அந்த விதிகள் இன்னும் சரியாக அமுல் நடத்தப்படவில்லை. இதைப் பற்றித் தமிழ்மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இந்தச் சட்டவிதிகளை கொண்டுவந்து நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்த தமிழரசுக்கட்சி தலைவர்களும் அங்கத்தவர்களும்கூட இதில் அதிருப்தி கொண்டுள்ளனர். தமிழ் மொழிச் சட்டவிதிகளை அமுல்நடத்த உடனடியாக துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென தமிழரசுக் கட்சியின் கல்முனை மகாநாட்டிலும் தமிழரசு வாலிப முன்னணியின் மாவிட்டபுர மகாநாட்டிலும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றபின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நீதியமைச்சின் கீழ்தான் உத்தியோக மொழி இலாகா இயங்குகின்றது. தமிழ்மொழிச் சட்ட விதிகள் அமுல்நடத்தப்படவில்லையென்றும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் தமிழரசுத் தலைவர்கள் நீதியமைச்சரை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.



ஆனால் தமிழ்மொழிச்சட்ட விதிகள் சரியாக அமுல் நடத்தப்படாமல் இருப்பதற்கான காரணங்களையும் டாக்டர் நாகநாதன் சபையில் விளக்கிக் கூறியிருக்கின்றார்.

தமிழ்மொழிச் சட்ட விதிகள் அமுல்நடத்தப்படவில்லை. இந்தச் சட்டவிதிகளை அமுல்நடத்துவதற்கு இந்த அரசாங்கமோ, பிரதம மந்திரியோ, இதர மந்திரிகளோ எதிராக இருக்கிறார்களென்று நாம் கூறவில்லை. ஆனால் உத்தியோக மொழி இலாகாவுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரி, சீசரை வெளியேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் போலப் பொறுப்பேற்றிருக்கிறார். அவர் இன்னும் பதவியிலிருக்கிறார். இதுதான் எல்லாக் குழப்பத்துக்கும் காரணம்." என்று டாக்டர் நாகநாதன் கூறினார்.

முன்னைய அரசாங்கத்தின் அதிகாரவர்க்க ஆட்சியே இன்றும் நடைபெறுகின்றதென்றும் இவர்கள்தான் தமிழ் மொழிச் சட்ட விதிகளை அமுல் நடத்துவதற்குத் தடையாக இருக்கிறார்களென்றும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி, அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல் நடத்துவதைத் தடை செய்து, சதிசெய்து அரசாங்கத்துக்கு இழுக்கு ஏற்படுத்த முனையும் இந்த அதிகாரிகள் [illegible] என்று [illegible] தமிழ் மொழிச் சட்ட விதிகளை அமுல் செய்வதில் மட்



டுமல்ல இதர நிர்வாக அலுவல்களிலும் அதிகார வர்க்கத்தினர் இதே சதி நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றனர் என்பதும் தெளிவாகி விட்டது. அரசாங்கம் விழிப்புடனிருந்து எச்சரிக்கையாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கம்யூனிஸ்ட் நாடுகளில் அந்த அரசாங்கத்தின் கொள்கைகளை கம்யூனிஸ்ட் கட்சியே வகுக்கின்றது. அந்தக் கொள்கைகள் நிர்வாக ரீதியில் சரியாக அமுல் நடத்தப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க ஒவ்வொரு இலாகாவிலும் கொமிஸார் ஒருவர் நியமிக்கப்படுகிறார். இங்கு அரசாங்க ஊழியர் வேறுபட்ட அரசியல் கொள்கைகளைக் கொண்டிருக்கின்றனர், இதனால் அரசாங்கத்தின் கொள்கைகளை அவர்கள் அமுல் நடத்துவதற்கு இடையூறு செய்யக் கூடும். இதைத் தடுத்து நிர்வாக ரீதியில் கொள்கைகளை அமுல் நடத்துவதற்கு கண்காணிப்பு அதிகாரிகளையோ குழுக்களையோ நியமிப்பது பயனளிக்கலாம்.

### சுதந்திரக்கட்சி மகாநாடு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மகாநாடு மீண்டும் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. பலதடவைகளாக ஒத்திவைக்கப்பட்டு வரும் இந்த மகாநாடு ஒக்டோபர் மாதம் 13-ந் திகதிக்கு இப்பொழுது நிச்சயிக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைவி திருமதி சிறிமாபண்டாரநாயகா வெளிநாட்டிலிருந்ததால் முன்னர் இந்த மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டது. மூன்று உபதேர்தல்கள் நடைபெறவிருக்கும் இச் சமயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மகாநாடு நடைபெறவிருக்கிறது. சுதந்திரக்கட்சி, உபதேர்தலை முன்னிட்டு வெளியிடவிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பத்திரிகைகளைத் தேசியமயமாக்கும், அதன் முன்னைய பொதுத் தேர்தல் விஞ்ஞாபனக் கொள்கைவிடுபடவிருப்பதாகவும் ஆனால் இந்தக்கொள்கையை கைவிடக்கூடாது என்பது லங்காசமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்கட்சியும் கேட்கவிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. உபதேர்தல்கள் பலப் பரீட்சையின் களமாக விளங்கப்போகின்றன என்பது இப்பொழுதே நடைபெறும் முஸ்தீபுகளிலி

ருந்து தெரிகிறது. தேசிய அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சி முன்னணிக்கும் இடையில் நேரடிப்போட்டியாக இவை இருக்குமா? என்பது இனித்தான் தெரியவேண்டும்.

### மாவட்டசபை மசோதா

மாவட்டசபை மசோதா விரைவில் வரவிருக்கிறது. அடுத்த மாதம் இம் மசோதா பார்லிமென்டில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேறிவிடும். பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தில் பிரதேச சபைகள் அமைப்பது பற்றி ஓர் அம்சம் சேர்க்கப்பட்டிருந்தது. அதன்படி கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படும் பிரதேச சபைகளும் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்படும் பிரதேச சபைகளும் அவை விரும்பித் தீர்மானித்தால் ஒன்றுடன் ஒன்று இணைந்து, எல்லாம் ஒன்றாக இணைந்து ஒரே பிரதேச சபையாக இணையக்கூடிய ஷரத்து இருந்தது. இப்பொழுது கொண்டுவரவிருக்கும் மாவட்ட சபை மசோதாவில் இந்த ஷரத்து இருப்பதாகத்தெரியவில்லை. முன்னைய அரசாங்கம் மாவட்ட சபைகளுக்கு அளிக்க ஒப்புக் கொண்டிருந்த அதிகாரங்களைவிடக் குறைவான அதிகாரங்களையே தேசிய அரசாங்கம் அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறதென்பதை பிரதமர் முன்னரே கூறியிருக்கிறார் எனினும் மாவட்ட சபை மசோதாவைத் தயாரித்துள்ள அமைச்சர் திருச்செல்வத்தின் சட்டமூளையில் தமிழ் பேசும் மக்களுக்கு நம்பிக்கை அதிகம் இருக்கிறது.

### சிறுபான்மை சத்தியாக்கிரகம்

சிறுபான்மைத்தமிழர் தங்கள்உரிமைகளைப் பெறுவதற்காக இம்மாதம் 18-ம் திகதி சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்போவதாக சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணி அறிவித்துள்ளது. எங்கே, எப்படி சத்தியாக்கிரகம்நடைபெறுமென்பது தெரியவில்லை.

சிறுபான்மைத்தமிழர் இன்னும், சமூகத்தில் ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வாழும் நிலையிலுள்ளனர் என்பது உண்மையே, எனினும்சிலவருடங்களுக்கு முன்னர் இருந்தநிலையுடன் ஒப்பிடுகையில் இன்று எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தீண்டாமை ஒழிப்புச்சட்டம், நிறைவேற்றப்பட்டபோதிலும் அது சரியாகச் செயல்படவில்லை. எனினும் இந்த அளவு முன்னேற்றம்ஏற்படுவதற்கு மக்களின் மனமாற்றமே காரணம். சட்டத்தினாலும் சத்தியாக்கிரகத்தினாலும் ஏற்படுத்தக்கூடிய மனமாற்றத்தைவிட சமய, சமூக அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தியும், இதரமக்களின் உதவியையும்ஒத்துழைப்பையும்பெற்று ஏற்படுத்தும் மனமாற்றமே பயன்தரும். நிலைபெறும். சத்தியாக்கிரகம்என்பது மிகவும்கூரிய ஆயுதம். அதைச் சரியான பயிற்சி பெற்றுப்பாவிக்க வேண்டும்.

"ஞாபகப்படுத்துகிறோம்"
உங்களுக்குத் தேவையான
சேர்ட்டுகள்
காற்சட்டைகள்
பிளவுஸ்கள்
கவுன்கள்
சேலைகள்
இன்னும் அநேக தினுசுகள்
உங்கள் தேவைக்கு
ரொலரும்ஸ்
46, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'விழிகள் சொல்வதெல்லாம் நிஜமா? உன் கண்ணே உண்மை சொல்லும் சாட்சியா? பெண்ணே நீ வானவில்லின் வர்ணஜாலமா?' என்று கே. ஆர். விஜயாவிடம், ஜெய்சங்கர் கேட்கிருர் போலும்! 'சேலம் மூவீஸாரின் 'தங்க வளையல்' திரைப்படத்தில் இடம் பெறும் காட்சி இது!

# இவர் எப்படி?

'பி'ஸி நடிகர் ஜெய சங்கரின் வீட்டுக்குப் போன் செய்தால், அவர் சகோதரர்தான் பதில் கொடுப்பார். 'ஜெய்'க்கு இப்போது 'ரைமே' இல்லையே! ஒரே சூட்டிங்! இரவு பத்து மணிக்கு மேலாகத்தான் வீட்டில் இருப்பார். அப்போது போனில் பேசலாமே!'' என்கிருர் அவர் சகோதரர்.

இரவு பதிஞெரு மணிக்குநாம்பேசுகிறேம். ஜெயசங்கர் பதில் சொல்கிருர்.

''சிலோன் பத்திரிகையாளரா? உங்களைச் சந்தித்து பல விஷயங்கள் பற்றிப்பேசத் தோன்றுதே! சே, ஒரே படப் பிடிப்பாக இருக்கிறது. காலை ஆறுக்குப்போனுல் இரவு பத்தாகிறது வீட்டுக்கு வர! ம்... நாளைக்கு பகல் பத்து மணிக்கு 'காதல்படுத்தும் பாடு' செட்டிங்குக்கு வர்றீங்களா? கட்டாயம் வந்திடுங்க!'' — போனிலேயே மிகவும் பண்பாக, இனிப்பாக, சுருக்கமாக பேசியவரை அடுத்த நாள் அவர் சொன்ன நேரத்துக்கு ஸ்டுடியோவில் சந்திக்கிறேம்.

''ஜோசெப் தளியத்! அவர்தான் என்னைத்திரையுலகுக்குக் கொண்டுவந்தார். அவர் இல்லாவிட்டால் நான் எப்படி ஸார் திரையுலகுக்கு வந்திருக்க முடியும்? அதிர்ஷ்டம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் வந்துகொண்டிருக்கிறது!''- சந்திப்பின்போது 'ஜெய்' என்னிடம் பேசிய முதல் வார்த்தை இதுதான்.

பார்ப்பதற்கு வசீகரமாக, எடுப்பாக, எந்நேரமும் சிரித்தபடி, 'ஜோலி'யாக இருக்கிருர் 'ஜெய்.' தன்னைப்பற்றிய பல விஷயங்களையெல்லாம் என்னிடம் சொன்ஞர்.

## நாடகப் பைத்தியம்

''சட்டக் கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்த போது நான் நாடகப் பைத்தியமானேன்! நான் நடித்த பல நாடகங்களை பல சினிமா நடிகர்கள் பாராட்டிஞர்களே தவிர சினிமாவில் நடிக்க சான்ஸ் வாங்கித்தரவில்லை! பின்னுல் டெல்லியிலிருந்து எனது நண்பன் அங்கு வேலைக்கு வரும்படி அழைத்தான். சிலகாலம் அங்கு தங்கியிருந்தேன். டெல்லி வெறுத்தது. எனது நாடகப் பைத்தியத்திஞல் டெல்லிக்கு 'பாய், பாய்' போட்டுவிட்டுத் திரும்பினேன் சென்னைக்கு!'' என்ருர் 'ஜெய்.'

## வாழ்வளித்தவர்

சென்னைக்கு வந்த இவரை இசையமைப்பாளர் டி. ஆர். பாப்பா ஜோசெப் தளியத்திடம் கொண்டுசென்ருர். மேக்கப் டெஸ்ட் எல்லாம் போட்டுப் பார்த்தார் தளியத். தளியத்தின் 'இரவும் பகலும்' முதல் படத்திலேயே கதாநாயகஞனுர்!

இப்போது பதினேழு படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் 'ஜெய்'க்குக் கர்வமில்லை! எவருடனுமே வீண் வம்புக்குப் போகமாட்டார்! தானும் படப்பிடிப்புமாக இருந்து கொள்ளும் ஜெய்சங்கர் இலங்கைமீதும் இலங்கை ரசிகர்மீதும் நிறையளவு அன்பு வைத்திருக்கிருர்.



# ஹாலிவூட் ராணிகளின் கனவுலக ராஜா!

''சோபியா லாரனை திருமணம் செய்துகொண்டு, குழந்தைகள் பெற்று குடும்பவாழ்க்கை நடத்தலாம். ஜீன்மொராவையா! 'சோபியா'வை திருமணம் செய்துகொண்டால், இவரை ஆசை ராணியாக வைத்துக் கொள்ளலாம். பிரிஜிட் பார்டோவை அப்படியே வைத்துக்கொண்டு எத்தனை மணிநேரம் வேண்டுமாஞலும் அழகுபாரித்துக்கொண்டிருக்கலாம்'' என்கிருர் ஹாலிவூட் எழிலரசிகளின் கனவுலக ராஜாவாகவும், திரையுலகின் முடிசூடா காதல் மன்னஞகவும் திகழும் 41 வயதான இத்தாலிய நடிகர் மார்சலோ மஸ்டிராயனி!

ஆங்கிலம் தெரியாத இவருடன் காதல் காட்சிகளில் இணைந்து நடிக்க ஆங்கில சினிமா எழிலரசிகள் துடித்துக்கொண்டிருக்கிருர்கள்! ஆனுல் மார்சலோ என்றுமே இத்தாலியை விட்டு வெளியே சென்றுநடிப்பதில்லை நடிக்கவும் விரும்புவதில்லை.

படமொன்றுக்குப் பதினுன்கு லட்சம் வாங்குகிருர். இவருக்கு 14 வயது அருமை மகள் ஒருத்தி இருக்கிருள்.

காதல் மன்னஞகத் திகழும் இவர் தன்னுடைய நடிப்பைப்பற்றி என்ன சொல்லுகிருர் தெரியுமா?

''பெண்களுடன் நடிப்பதில் நான் விசேஷ யுக்திகளைப்பற்றியெல்லாம் நினைப்பதில்லை. நேரத்தை வீணுக்குவதுமில்லை. நான் நாஞகவே நடிக்கிறேன்''

—மேகலா.

# கலை அரங்கம்

## "டாக்ஸி டிரைவர்" வருகிருர்

இருபத்துமூன்று வயது தமிழ்ப் பெண்ணெருத்தியின் துணிகர முயற்சிதான் இந்த 'டாக்ஸியின் டிரைவர்' மாலினிதேவியின் தயாரிப்பில் இலங்கை நடிகர்களை முற்றுக வைத்து இலங்கையிலேயே தயாரிக்கப்பட்ட-டாக்ஸி டிரைவர் படப்பிடிப்பு பூர்த்தியாகிவிட்டது! விரைவில் திரைக்கு வருகிறது. சுண்டிக்குளியைச் சேர்ந்த ரி. சோமசேகரனின் டைரக்ஷனில் உருவான இப்படத்தில் இலங்கை வாஞெலி 'சாஞ', மன்ஞர் எம். பி.யின் மகன் தேவன் அழகக்கோன், யோகா, ருத்ராணி, எம். வி. பாலன் ரொஸாய்ரோ பீரிஸ் ஆகியோர் நடித்துள்ளனர்.

## "கேளுங்கள் கொடுக்கப்படும்!"

பைபிளின் வாசகத்தை வைத்து 'தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற படம் வெளிவந்துள்ளதைத் தொடர்ந்து ஜானி புரொடக்ஷன்சார் தயாரிக்கும் முதல் படத்திற்கும் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற பைபிள் வாசகமே தலைப்பாகத் தரப்பட்டுள்ளது.

இதில் ரவிச்சந்திரனும் பாரதியும் முக்கிய பாகத்தில் நடிப்பார்கள். இதன் கதை வசனத்தை ஏ.எல். திருநீலகண்டன் எழுதியுள்ளார்.

ஒரு துணை டைரக்டர் இதை டைரக்ட் செய்யலாம்.



யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற யாழ். பிரதேச கலாமன்ற கலை விழாவில் யாழ். கலாக்ஷேத்திர மாணவிகள் ராதா விவேகானந்தன், ராஜேஸ்வரி கதிரவேலு, தயாவதி தர்மலிங்கம் ஆகியோரின் நடனத்தின் ஒரு காட்சி



கலை விழாவில் நடனமாடிய யாழ். கலாக்ஷேத்திர மாணவிகள் தயாவதி தேவசுந்தரன், ஸ்ரீரஜனி சுப்பிரமணியம் ஆகியோரின் ஒரு தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றுவது உலக யுத்தம் ஆரம்பமா ?

## டிகோலின் புரியாத ராஜதந்திரம்; இந்தியாவின் சங்கடம்; ரொடீஷிய நிலை

### உலக மேடை

"யதார்த்தன்"

மூன்றுவது உலக மகா யுத்தம் ஆரம்பமாகிவிட்டதா?

மூன்றுவது உலக யுத்தம் ஆரம்பித்துவிட்டதாகவே அரசியல் அவதானிகள் சிலர் கருதுகின்றனர்.

வியட்நாமில் அமெரிக்கப் படைகள் மேலும் மேலும் குவிக்கப்பட்டுவருவதும் வட வியட்னும் நேரடியாக தாக்கவும் தாக்குதலுக்குள்ளாகவும் நேர்ந்திருப்பதும், வட வியட்னும் எல்லையில் சீனர்கள் படை குவித்து ஆயத்தம் செய்து வருவதும், 'கலாசாரப் புரட்சி' என்ற பெயரில் நவசீனவில் புதிய புரட்சி இயக்கம் ஆரம்பித்து 'செங்காவலர்' படையொன்று கிளம்பியிருப்பதும் அவசியம் நேர்ந்தால் யுத்தத்துக்குத் தயாராவதென செங்காவலர் அறிவித்திருப்பதும் சீனவில் புதிய படைத் தளபதி லின்பியாவின் கை ஓங்கிவருவதும் மூன்றுவது யுத்தம் உலகின் வாசலுக்கு வந்துவிட்டதாகவே தோன்றுகின்றது. யுத்தம் ஆரம்பமாகிவிட்டது என்று கூறுவதில் கூடத் தவறில்லை.

நிலைமை கட்டுமீறிப்போய்விட்டது. உலக அமைதிலைப் பாதுகாப்பது, இன்றுள்ள நிலையில் இனியும் சுலபமில்லையென்பதை அனுபவபூர்வமாக உணர்ந்துகொண்டதால்தான் ஐ. நா. தலைமைக் காரியதரிசி பதவியி[illegible]இனியும் இருக்க விரு[illegible] யுதாண்ட் அந்தப் பதவியே வேண்டாமென்று உதறித்தள்ளுகிறார் என்றும் கருத இடமுண்டு.

நவசீனவில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால் இனியும் அது "கடதாசிப் புலியாக" இராமல் காரியத்தில் இறங்கத் தயாராகிக்கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. அமெரிக்காவுடன் அது நேரடி யுத்தத்தில் இறங்கக்கூடும். அமெரிக்காவின் நடவடிக்கைகளும் சீனவின் நேரடி நடவடிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

இந்நிலையில்தான் பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல், "வியட்னுமிலிருந்து அமெரிக்கா வெளியேறவேண்டும்" என்று துணிச்சலுடன் கூறியிருக்கிறார். ஜெனரல் டிகோல் எப்பொழுதுமே துணிச்சல்காரர். போரில் அனுபவம் பெற்றவர். யுத்த யுக்தி தெரிந்தவர். காலத்துக்கேற்ப நடந்துகொள்ளத் தெரிந்தவர், தமது உயிரைக் குடிக்க, சதிகாரர் செய்த முயற்சிகளையெல்லாம் 'பூ' என்று ஊதித் தள்ளியவர். அல்ஜீரிய விடுதலையை எதிர்த்த பூர்வீக பிரான்சுக்காரரான முன்னுள் தளபதிகள் சதி செய்து பாரிசையே கைப்பற்றத் திட்டமிட்டுச் செயலிலிறங்கியபோது சிறிதும் கலங்காமல் அவர்களை இருந்த இடமே தெரியாமலாக்கியவர். நாளுக்கொரு பிரதமரும் மாதத்துக்கொரு மந்திரிசபையாகவும் இருந்த பிரான்சில் ஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்தியவர். ஓரளவு அணு ஆயுத பரிசோதனைத் தடை ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது, "அணுகுண்டுகளைச் செய்து குவித்து வைத்துக்கொண்டு நானு எங்களையும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடச் சொல்கிறீர்கள்? அதற்கு இணங்க முடியாது" என்று பதிலளித்துவிட்டு அணு ஆயுதப் பரிசோதனைகளை நடத்தியவர்.

துணிச்சலும் தன்னம்பிக்கையும் திறமையும் உள்ள ஜெனரல் டிகோலின் ராஜதந்திரம் சில சமயங்களில் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியாதது. "வியட்னுமிலிருந்து தனது துருப்புகளை வாபஸ் பெற்றுக்கொண்டு வியட்னும் பிரச்னையிலிருந்து அமெரிக்கா வெளியேறிவிடவேண்டும்" என்று ஜெனரல் டிகோல் கூறியிருக்கிறார். வியட்னும் பிரச்னை முற்றும்வரை இக்கருத்தை அவர் இதுவரை கூறியதில்லை. வியட்னும் பிரச்னை கட்டுக்கடங்காமல் போய்விட்டதென்பதை அவர் உணர்ந்துகொண்டாரென்பதையும் வியட்னும் நிலைமையையிட்டு பிரான்ஸ் ஆழ்ந்த கவலைகொண்டுள்ளதென்பதையுமே அதிபர் டிகோலின் இக்கருத்து சுட்டிக்காட்டுகிறது. எனவேதான் நிலைமை மேலும் மோசமாகாமல் தடுப்பதற்கு அவர், 'அமெரிக்கா வெளியேறவேண்டும்'' என்ற யோசனையைக் கூறியிருக்கவேண்டும்.

இது தவிர, பிரான்சுக்கும் நவசீனத்துக்குமிடையில் உறவும் தொடர்பும் அதிகரித்துள்ளது. சீனவின் நோக்கத்தையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் டிகோல் அறிந்திருக்கக்கூடும்.

வியட்னுமில் அமெரிக்கத் துருப்புக்கள் இருப்பதாலும் வியட்னும் பிரச்னையில் அமெரிக்கா தனது நோக்கத்தில் வெற்றி பெறவேண்டும் அமெரிக்கா வெற்றி பெறுவதற்கு சீன விட்டுக்கொடுக்கப்போவதில்லை, எனவே அமெரிக்கா வெளியேறுவதே விவேகமான செயல் என்றும் டிகோல் கருதியிருக்கலாம்.

என்றாலும் வியட்னுமிலிருந்து அமெரிக்கா வெளியேறினால் தென்கிழக்காசியா முழுவதற்குமே ஆபத்து நேரும் என்று கூறுபவர்களுக்கு டிகோல் என்ன பதில் சொல்வார்.

"ஐரோப்பியர் ஐரோப்பியராகவே இருக்கவேண்டும். அவர்கள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்வார்கள். அமெரிக்கா அவர்களுக்கு ஒன்றும் செய்யத் தேவையில்லை'' என்பதுபோல் "தென்கிழக்காசியர்களும் தம்மைத்தாமே கவனித்துக் கொள்வார்கள், அமெரிக்கா கவலைப்படத்தேவையில்லை'' என்று கூறுவாரா?

தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளக் கூடிய சக்தி தென்கிழக்காசிய நாடுகளுக்கு உண்டா? இந்த நாடுகளில் ஆதிக்கத்தை நிலைநாட்ட எண்ணும் சக்திமிக்க நாடு தன் நோக்கத்தைச் சுலபமாக நிறைவேற்றிக்கொள்ள முடியாதா?

அமெரிக்கா வியட்நாமிலிருந்து வெளியேறவேண்டுமென்று ஜெனரல் டிகோல் கூறியிருப்பது, டெவன்பிரபு (சேர் அந்தனி ஈடன்) கருத்துத் தெரிவித்ததுபோல் கம்போடியா, வியட்னும் எல்லைப் பகுதிகளில் நடுநிலை வலய (சூனியப் பிரதேசம்) ஏற்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டதுதானே என்றும் சிந்திக்க இடமுண்டு.

ஆனல் ஜெனரல் டிகோலின் ராஜதந்திரம் புரிந்துகொள்ள முடியாததுபோல் "அமெரிக்கா வெளியேற வேண்டும்'' என்ற அவரது கருத்தும் புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது.

★

### இந்தியா

ஆசியாவிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்கும் இந்தியாவின் பொதுத் தேர்தல் அடுத்த வருடம் பெப்ரவரி மாத முற்பகுதியில் நடைபெறவிருக்கிறது தேர்தல் காலம் நெருங்க நெருங்க உள்நாட்டில் பிரச்னைகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. அதேசமயம் வெளியார் தொல்லைகளும் இந்தியாவுக்கு அதிகரித்துக்கொண்டிருக்கின்றன.

சீனவும் பாகிஸ்தானும் இந்தியாவின் அரசியல் பகைவர்கள். எத்தனை பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் எந்த நாட்டிற்குச் சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டாலும் இந்தியாவுடன் பாகிஸ்தானே, சீனவோ நல்லெண்ணமும் நல்லுறவும்கொண்டிருக்கவில்லை.

இந்திய-பாகிஸ்தான் தகராறுக்கு காஷ்மீர் பிரச்னை ஒரு சாட்டு. இந்திய-சீனத் தகராறுக்கு ஏதோ ஒரு எல்லை ஒரு காரணம்.

இந்திய-சீன தகராறு சீன-பாகிஸ்தான் உறவுக்கு உரம். சீன-பாகிஸ்தான் நட்புறவு செழித்துவளர்ந்துவிட்டது.

இப்பொழுது இரண்டுக்குமிடையில் இராணுவ உறவும் ஏற்பட்டுள்ளது. இந்திய எல்லையில் தாஷ்கண்ட் உடன்படிக்கையின்படி துருப்புகள் வாபஸ்பெறப்பட்ட சில இடங்களில் மீண்டும் பாகிஸ்தான் துருப்புகள் நிலைகொண்டுள்ளனவாம். பாகிஸ்தான் துருப்புகள் மட்டுமல்ல சீன இராணுவ ஆலோசகர்களும் சீன டாங்கிகளும் ஆயுதங்களும் நடமாடுவதைக் காணக்கூடியதாக இருப்பதாக செய்திகள் கூறுவதுமட்டுமல்ல இந்திய பாதுகாப்பு மந்திரியும் கூட இதை ஊர்ஜிதம் செய்திருக்கிறார். சீனவின் உதவியை மட்டுமல்லாது மேற்கத்திய நாடுகளின் ஆயுத உதவியையும் கூட பாகிஸ்தான் மறைமுகமாகப் பெற்றுவருகிறது. ஈரான் மூலம் மேற்குஜெர்மனியிடமிருந்து பாகிஸ்தான் உதவி பெற்றுவந்திருக்கிறதென்பதும் தொடர்ந்துஇந்தஉதவி கிடைப்பதை கண்டாதடுத்துவிட்டதென்பதும் இப்பொழுது தெளிவாகிவிட்டது. 'நேட்டோ', 'சியாட்டோ' 'சென்டோ' எனப்படும் [illegible] பாகிஸ்தான் அங்கம் வகித்துக்கொண்டு சீனவிடமிருந்தும் உதவிபெற்றுப் பாலுக்கும் காவல் பூனைக்கும்தோழனுக பாகிஸ்தான் நடந்துகொள்கிறது. இது அதன் ராஜதந்திரம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் எல்லை ராஜ்யங்கள் பாகிஸ்தானின்இந்த நடவடிக்கைகளைக் கண்டு அஞ்சுவதும் உள்நாட்டில் என்ன கஷ்டமிருந்தாலும் தனது பாதுகாப்புச்செலவுக்கென கணிசமான அளவு நிதிசெலவிட வேண்டியிருப்பதும் அவசியமானதே. இந்திய இராணுவச் செலவுத் தொகையில் இருபது சதவிகிதம் குறைக்கப்படவேண்டுமென்ற யோசனையை இந்திய அரசாங்கம் நிராகரித்துவிட்டதில் தவறில்லை. இந்தியாவில் பொதுத்தேர்தல்நடைபெறவிருக்கும் சமயத்தில் அதை குலைக்க வெளியார் விஷமம் செய்யக் கூடுமென எதிர்பார்ப்பதில் நியாயமிருக்கும். உள்நாட்டில் தேர்தல் காரணமாக பூசல்கள் கிளம்பாமல் தேசியஒருமைப்பாட்டையும் அமைதியையும் இந்திய மக்கள் பாதுகாப்பார்களா? என்பதே இன்றுள்ள கேள்வி?

★

### காமன்வெல்த் பிரதமர்கள்

காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாடு இன்று லண்டனில் ஆரம்பமாகிறது.

ரொடீஷியப்பிரச்னை காமன்வெல்த்தையே சீர்குலைத்துவிடுமா என்ற கேள்வியுடன் இந்த மகாநாடு ஆரம்பமாகிறது. காமன்வெல்த் குடும்பத்தில் 23 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆனல் பதின்மூன்று நாடுகளின் தலைவர்களே இதில் கலந்துகொள்கின்றனர். இதர நாடுகள் தலைவர்களுக்குப் பதிலாக முக்கிய அமைச்சர்களை அனுப்பியிருக்கின்றன. ரொடீஷியப்பிரச்னையில் பிரிட்டன் நடந்துகொள்ளும் முறையைக் கண்டித்து ஸாம்பியா அதிபர் கென்னத் கௌண்டா செல்லவில்லை. மற்றும் சில நாடுகளின் தலைவர்கள் வேறு காரணங்களுக்காகச்செல்லவில்லை.

ஸாம்பியாவும் மற்றும் பல ஆசிய-ஆபிரிக்க நாடுகளும் ரொடீஷியாவில் ஸ்மித் ஆட்சியை பலாத்கார நடவடிக்கையின் மூலம் அகற்றவேண்டுமெனவும் இப்பொழுது பிரிட்டன் மேற்கொண்டுள்ள பொருளாதார வர்த்தகத்தடை நடவடிக்கைகள் உரிய பலனளிக்கவில்லையென்றும் கூறுகின்றன. ரொடீஷிய சுதேசிகளான ஆபிரிக்க மக்களுக்கு சுதந்திரம் வழங்கி ஆட்சி உரிமை அளிக்காமல், சிறுபான்மையினரான வெள்ளையர் ஸ்மித்தின் தலைமையில் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்து ஆட்சியைப் பறித்துக்கொண்டதைப் பிரிட்டன் 'அகிம்சை வழி'யில் சமாளிக்க முற்பட்டது ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கு ஆத்திரமூட்டியது, என்றாலும் இன்று "பிரிட்டன் பலாத்தாகாரம் "உபயோகிக்க வேண்டுமென்ற குரலுன் சுருதி சற்றே இறங்கியுள்ளதாகவே தோன்றுகிறது. பிரிட்டனை இந்த நாடுகள் கண்டித்தாலும் காமன்வெல்த்தைவிட்டு எத்தனை நாடுகள் வெளியேறத் தயாராக இருக்கின்றன?

ரொடீஷியப்பிரச்னை காரசாரமான விவாதத்தையும் நெருக்கடியையும் தோற்றுவித்தாலும் காமன்வெல்த்தை சீர்குலைத்துவிடுமென அஞ்சுவதற்கு இடமில்லையென்றே தோன்றுகிறது.

## யோகசுவாமிகள் கண்ட நல்லூரான்

— வை. க. சிற்றம்பலம் —

கொழும்புத்துறை முனிவராகிய உயர் திரு. யோகசுவாமியவர்கள் நல்லூர் முருகனிடத்துப் பெரும் ஈடுபாடுடையவர்கள். 'தான்பெற்றஇன்பம் பெறுகவையகம்' என்னும் பண்புடையவர்கள். தமது குருவாகிய செல்லப்பாச் சுவாமியாரை நல்லூரில் கண்டவர்கள். அக்குருமணியின் உபதேசம் பெற்றவர்கள். அக்குருநாதனையும், அவர் வணங்கும் முருகனையும் தாமும் வணங்கும் பாக்கியம் பெற்றவர்கள். அம்முருகன் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் அத்திருத்தலத்தையும், அவ்வூராகிய நல்லூரையும் பலவாறு துதிப்பவர்கள். சுவாமியவர்கள் தாம் பாடிய நற்சிந்தனையில் முருகப்பெருமானையும் செல்லப்பாச் சுவாமியாரையும் பலவாறுபுனைந்துபாடியுள்ளார்கள். அதிலொன்று

இராகம்: ஜோகினி. தாளம்: ஆதி.

பல்லவி

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்.

அநுபல்லவி

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்காயுடன் பழம்கொண்டு நீ செல்லு

சரணம்

வாடி உன்மனம் ஒடினுலும் வருத்தங்கள் கோடி
கோடியாகக் கூடினுலும்—குறைகள் வந்து (நல்)

சரணம்

தேடி யுன்னை மூடினுலும்—செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடி ஓடிப் போமே (நல்)

வெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டு
கண்ட கண்ட இடங்கலங்கி நீ திரியாதே (நல்)

இப்பாட்டில் நல்லூரின் பெருமையும், முருகனின் பெருமையும், செல்லப்பாச்சாமியாரின் பெருமையும் கூறப்பட்டுள்ளன. நாம் அப்பதிக்குச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லாது அப்பெருமானை வணங்கி அர்ச்சிக்கும்பொருட்டு தேங்காய், பழம் முதலியவற்று

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

முதல் வெடி—

இரண்டாம் வெடி—

சம்மட்டி ஒலிகள் ... கல்லுப் பிளந்து துண்டம் துண்டமாகி, வெண்மையும் - மண் செம்மையுமாக—மண்மேட்டிலே குவிகின்றன.

மூன்றும் வெடி—

தொடர்ந்து சம்மட்டிஒலிகள் ...

நாலாவது —

சிறிலிட்டுச் தோல்வியிலே அமைதியாகிறது.

கமுகம் மடல்களை வளைத்து முழங்காலோடு கட்டி, உடலெங்கும் மாப்புள்ளிகளாக-அழகுக் கோலத்தில் நிற்கும் நாலைந்து கல்லுப்புரட்டிகள் ...

அகல வாய்களைப் பிளந்து கொண்டு, சிதையும் நிலையில் முழிக்கும் கற்பாறைகளில் அவர்களின் கைகளின் அமுக்கம் சம்மட்டி அடி அமுத்தத்தில் பலம் காட்டுகின்றது.

சில்லவல்லமாகிச் சிதையும் கற்கள்.

அதுதான் — அவர்கள் தொழில்.

தலையிலே இருந்த செம்பாட்டுத் துவாயைக் கழற்றி ஒரு உதறு உதறி வாயை-முகத்தை-உடலைத் துடைத்துக் கொள்ளுகிறான் சின்னப்பன்.

வியர்வை மணம் நாசியில் குபீரென்று அடிக்கின்றது.

நித்தம் நித்தம் துடைத்து அது அவனுக்குப் பழக்கம்.

துலை கம்பியைச் சுழற்றிச் சுழற்றி சிறு சுத்தியலால்-கல்லைத் துளைத்துத்துளைத்து-மறுவெடிக்குத்தயார்செய்ய அவன் கைகள் துருதுருவென்று இயங்குகின்றன ...

பார்வை மட்டும் வான் முகட்டில், செம்மையைத் தேடுகிறது.

சோர்ந்துபோன அவனுள்ளத்தைப் போல, நம்பிக்கை தளர்ந்து குமுறிக்கொண்டிருக்கும் அவன் எண்ணத்தைப் போலக் கைகளும் தளர்ந்து, சம்மட்டியைத் தூக்கிக் கற்பாறையில் ஓங்கி ஓங்கி குத்திக் கல்லை உடைத் தெறியத் திராணியற்றுச்சோர்கின்றன... கால்களிலும் கைகளிலும் முதுகிலுமாக 'விண் விண்' ணென்ற வலி...

''எப்பதான் எல்லாருக்கு விடிவுவருமோ ...? சும்மா சும்மா கல்லோடே மாரடிச்சு, கையும் காலும் கல்லாப்போனதுதான்மிச்சம்... நேற்று பறந்து வந்து கல்லு அடிச்ச நோ இன்னும் மாறயில்லை ... நிம்மதியா மூலைக்குள் படுக்கமுடியாது... ஓ ... என்னவாழ்க்கையடா...''

வயிற்றுக்காக- வயிறு இளைக்க - உடல்சோர உழைத்துத்தானே ஆக வேண்டியிருக்கிறது? இல்லாவிட்டால்—?

''சரி, பொழுதுபட்டுப் போச்சடா... வாருங்கோ போவம்...மிச்சத்தைப் பாப்பம்...''

சம்மட்டிகள் ஓய்கின்றன.

கமுக மடல் 'காலணி'கள் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. தளர்ச்சியான நடை.

''இந்த அலுப்புக்கு இரண்டுபோத்தில் அடிச்சுப் போட்டுப்போவம்... களைப்பு பஞ்சாப்போவிடும்...அப்படி வெண்டாத்தான் என்ரை உடம்பு நாளைக்குத் தாக்குப் பிடிக்கும்...''

எதிரே கள்ளுக்கொட்டில்-

கள்ளுக்கொட்டிலைச் சுற்றியுள்ள பாவட்டைகளில் தூக்கணாங் குருவிகளின் கூடுகள் போன்று தொங்கும் பனை ஓலைப்பிளாக்கள்... அசுரகதியில் தங்களுடைய பிளாக்களை 'வங்கண்டு' அவற்றை இருகைகளாலும் ஏந்தி ஒரே இழுவையில் கள்ளின்ருசியை ருசித்து...

'இஞ்சார், நீஇனிக்கள்ளுக் குடிச்சிட்டு இங்கை வரக்கூடாது... சும்மா பினாத்தி அக்கம்பக்கம் பெண் பிரசு இருக்கிற இடத்திலை...'

'அவளவை இருந்தாஎனக்கென்னடி...? என்ன வேணுமாம்...தெரியல்லை என்ரை குணம்?'

ஒழும்பு..., கோபம் வேண்டாம்...வாவன்...'

கெஞ்சல்.

மறுநாள்—பழைய கதை.

''என்னடா சின்னப்பு குடிக்காமை யோசிக்கிறாய்? மனுஷியைப் பேத்தியோ ... இப்ப என்ன சும்மாமோ ...? ம்... உதுகளெல்லாம் யோசிக்கிறதோ...? பொடியள் தனிய இருக்குங்கள்... கெதியாகப் போய்ச்சேர் ... போ...''

''போறன்—''

அம்பலன்வெளி அவர்கள் இராச்சியமாகிறது...

இரவில் சுடலை.

கல்லுடைத்த களைப்பிலும், அதைப் போக்கடித்த கள் தந்த வெறியிலும்கூட, சின்னப்பனின் கண்கள் சுடலையை மொய்க்கின்றன.

# தாய்

'மூதேசி ... பிரமசத்தி ... குடிச்சிட்டுவந்து இண்டைக்கு அடுப்பிலை உலையும் வையன்...பாப்பம்...'

கள்ளில் அவன்.

கள்ளுப்பிளா வாயுதட்டருகில் செல்லத் தயங்குகின்றது.

நீண்டநேரம் ... சாப்பாடு கேட்கப்பயம்.

பசி ...

வெறி ...

மயக்கம்.

மயக்கம்.

பன்னிரண்டு மணிக்கு அவன் தோளில் அவள் கரங்கள் அதன் ஸ்பரிசத்தில் வெறி நுகர்வைவிட வெறி..

'இனி குடிக்காதை... ஒழும்பிவா சாப்பிட.''

செம்மை நிறப் பிள்ளைக் கத்தாழையிலே, பூத்துக் குலுங்கும் தாளம்பூக்கள் ..

அந்தத் தாளம் பூக்களைப் பிடுங்கி, சுண்டல் கறிக்கு விட்டிற்குக் கொண்டுபோனாலென்ன என்ற மனத்தூண்டல்.

மறுகணம் —

சலிப்பு.

'வீட்டிலை காய்ச்சிறதுக்கு ஆயிருக்கினம்... அவளும் ஒரு மாதமோ இரண்டு மாதமோ அரைவரிசமா மயிலிட்டியிலைபோய் சுகமில்லாமக் கிடக்கிறாள்... பொடிச்சி ராசுவாலை ஏலுமோ ..? பாவம் குழந்தைப் பொடிச்சி...'

ராசு—

மாணிக்கம்?

அவனுக்குப் பிடித்தமான தாளம்பூ வறுவலின் மணம் நாசியைத் துளைக்கின்றது...

'இஞ்சார், நீ கள்ளுக்குடிக்கிறதெண்டா என்னாலை ஒண்டும்செய்யஏலாது.. உழைக்கிற காசும் மிச்சமில்லாமை ... உன்னைப் போல எந்த ஆம்பிளை இருக்கிறான்?'- மாணிக்கத்தின் முணுமுணுப்பு.

அவளுக்காக குடிக்காமல் நேரகாலத்தோடு - குடித்தாலும் வெற்றிலையைச் சப்பிக் கள்ளுநெடியின் தன்மையை மறைத்துக்கொண்டு, நல்ல பிள்ளையாகிறான் சின்னப்பன்.

இல்லையென்றால்—

**அடுத்தவாரம்:**

யூகோ சிறுகதை: 'உபாத்தியாயரின் பிரச்சினை' கே. ரி. ஆர். தமிழில் தருகிறார்.

வெளியிலே மாணிக்கம். அவளின் பாடப்படி சமையல் செய்யும் கன்னிமுயற்சி. மூத்தவள்-கனகம் -குடும்பப் பெண்ணாகிறாள்.

தீ நடுவில் தாய்ச்சி.

'அம்மா எங்கேயெண்ணை தேங்காயெண்ணை... நான் பப்படம் பொரிக்கிறன்...'

'விறுக்கியிலை முதல் தட்டிலை வெள்ளைப் போத்தில் இருக்கும் பார்.'

பிஞ்சுக்கரங்களின் வேலைத் துடிப்பு.

மூடியைத்திறந்து தாய்ச்சிக்குள் எண்ணையை ஊற்ற, என்ன-தாய்ச்சியும் எரியக் கூடியதா? அது ஏன் தீக்காகுளாகி உடும்பு நாக்கைப் போல் நீளவேண்டும்!

'ஐயையோ என்னை அம்மா!',

மண்ணெண்ணை நெடி.

பாவாடையில் தீ!

தீயின் வெம்மை தணியவில்லை.

பட்டு உடல் வெந்தது... கருகியது...... கடைசியில் உருவே அழிந்தது.

அவள்—அவனின் முதல் உற்பத்தி.

'இன்று அவளிருந்தால் தாயாகி இருப்பாள்......அப்பவே என்ன துடிபாட்டம். ராசு அவளுக்கு நேர்மாறு.'

அவள் சாம்பல் மண்ணிலே எத்தனையோ சாம்பல்.

...ப்பன் தாழையைப் பார்க்கின்றான்.

தாழையிலே தலைநீட்டும் பூக்கள்-?

அது அவளை அணைத்த தீ நாக்குகளா?

'அப்பூ...எனை அப்பூ'

பதினெட்டு வருடங்களாகக்கேட்க மறந்த குரல்.

''ஐயையோஎன்ரைராசு.. நீயும். நீயும்.. வேண்டாமடி குழந்தை.. நீசமைக்கவேண்டாம்.. வேண்டாம்.''

இரண்டாவது உற்பத்தி- இராசு. அவள் உடலிலும் தீயா?

''இ...ரா.. சு''

தலையில்-சுடலை மடத்தூண் மோதுகிறது.

அவன் குப்புற விழுகிறான்.

வெறி மயக்கத்தில் சுடலை

— செ. கதிர்காமநாதன் —

சன்னை.

இன்று-இராசு.

அவள் குழந்தை.

அவளில் அவள் இல்லை. ஏதோ இருக்கும் அரிசியைப் போட்டுவடித்து, நாலுமிளகாயை அம்மியிலே வைத்து அரைத்து சம்பலென்ற வடிவில் கறியாக்கி அவள் அளிக்கும் அமுதம்....

'மாணிக்கம், நீயேன் சுகமில்லாமைப்போனாய்...?'

தாளம் பூவினைத் தின்டப் போன அவன் கைகள் அதைத்தின்டவில்லை, கருகி வெதும்பிய கத்தாழைகளோடு-புழுதியாகிக் கிடந்த சாம்பல் மண் நேற்றிருந்த உடலின் இன்றைய கோலமொன்றைப் பறைசாற்றுகின்றது.

சாம்பல்-?

சாம்பலில் சிரிக்கும் முகம்!

பதினெட்டு வருடங்களுக்கு முன் சாம்பலாகிப் போன அதே முகம்.

'அப்பா... அப்பா...எனக்கு பீப்பி.. வாங்கித்தா அப்பா.. ஊத ஆசையாயிருக்கப்பா.'

வல்லிபுரக்கோயில் வெண்மணற்புழுதியில், தன்னிச்சையாக இன்பவெறியிலே நாதவெள்ளம் பரவுகிறது.

'பீப்பி' ஊதிய கரங்களின் சாம்பல்.

மடத்திலேயே நிம்மதியான தூக்கம்.

ஃ ஃ ஃ

நித்தம் நித்தம் சின்னப்பன் இரவில், குடிசையிலே இல்லாமல் நெடுநாள்.

இராசுவுக்கும் அவள் உடன்பிறப்புகளுக்கும் அது பழக்கம். சின்னப்பன் இருந்தாலும்-ஒரேபேத்தல்.

இராசுவுக்குச் சின்னஞ்சிறு வயதில் உலகம் சலிப்பாகிறது.

முன்பு என்றால் மாணிக்கம் பக்கத்திலே படுத்தால்தான் அவள் இருட்டிற்குள் நிம்மதியாகப் பயமின்றிப் படுப்பாள்...

இப்பொழுது அவள் தாய் இல்லையா?

அவளைச் சுற்றி அவள் உடன் பிறப்புகள்.

சின்னப்பன் இருந்தாலென்ன இல்லாவிட்டால் என்ன இராசுதான் அவர்கள் தாய்.

துன்பத்தை மறைத்துக்கொண்டு சிதைந்து போன இளம் உள்ளத்தின் ஆற்றாமையில் அவளுக்கு மௌனமான-விபரிக்க முடியாத-துயர அமுக்கங்கள்...

'எனை அம்மா... நீயேனனை எங்களை விட்டுட்டு ஆசுப்பத்திரிக்குப் போனநீ...? இஞ்சை நாங்கள் படுற கஷ்டம்...?

(8-ம் பக்கம் பார்க்க)








ப்ரோட்டீன் இல்லாவிடில் உங்கள் உடம்பு தன்னைத்தானே எரித்துக்கொள்ளும். இதன்காரணமாக நீங்கள் ஊக்கமிழந்து, சோர்வுற்று களைப்பாகவே இருப்பீர்கள்.

உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணவும், உடல் இழையங்களை உண்டாக்கவும், உடல் கலங்களை பழுது பார்க்கவும் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு விநாடியிலும் ப்ரோட்டீன் எரிக்கப்படுகிறது.

உடம்பினால் ப்ரோட்டீனை சேமித்து வைக்க முடியாது. ஆதலால் தினசரி தேவைப்படும் சக்திக்கும் வலிமைக்கும், தினமும் ப்ரோட்டீன் அவசியமாகும்.

தினசரி தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு தினமும் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்

**ப்ராண்ட்ஸ்**

எஸன்ஸ் ஒப் சிக்கன்
சக்தியளிக்கும் சத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளலார் வளர்த்த தமிழ்

**உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் சமர்ப்பித்த கட்டுரை.**

உரைநடைத் தமிழில் நூல்கள்தோன்றி, இலக்கிய அறிவை மக்கள் எல்லோரும் பெறுவதற்கு வாய்ப்புக்கிடைத்தது பத்தொன்பதாம் நூற்றுண்டில்தான்.

எளிய தமிழில் இனிய சந்தங்களுடன் மக்களுடைய அன்றாட வாழ்க்கையை எதிரொலிக்கும் கவிதைகளும் சிற்றிலக்கியங்களும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலேயே தோன்றின. தமிழ் உரைநடை நூல்களையும் எளிய நடையில்கவிதைகளையும் இயற்றியவர் பலர் என்றாலும், அவர்களில் தலைசிறந்துவிளங்கியவர் இராமலிங்க வள்ளலாராவார்.

உலகம் தழுவிய மதங்கள் எத்தனை உண்டோ அத்தனைக்குமுரிய வேத-புராண-இதிகாச - சாத்திர-தோத்திர இலக்கியங்கள் தமிழில் ஏராளமாக உண்டு. ஆம் சமயச் செல்வங்கள் எத்தனையுண்டோ புவிமீது அவையாவும் படைத்தது தமிழ்மொழி, சைவம்—வைணவம்—சமணம் பௌத்தம்—இஸ்லாமியம்-கிறித்துவம் ஆகிய மதங்களைச் சார்ந்த புலவர்கள், தத்தம் மதங்களின் பெயரால் செய்யுள் வடிவில் நூல்கள் இயற்றி, தமிழ் மொழியைவளப்படுத்தினர்.

இப்படி, வாழையடிவாழையென வந்த சர்வ சமயப் புலவர்களின் வழித்தோன்றலாக, சைவசமய வட்டாரத்தில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பாதியில் தோன்றினுர் இராமலிங்கர்.

இராமலிங்கர், உலகப்பற்றுக்கள் அனைத்தையும் துறந்து பரம்பொருள்ஒன்றினிடத்துமட்டுமே பற்றுக்கொண்ட பரமஞானியாவார். இதனை,

'எல்லாம் உடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியதடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றுதவண்ணம் அருள் செய்தல் வேண்டும்.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கியலட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்தும் விளங்கச்செய்தருளல்வேண்டும்' என்று 'சத்தியச் சிறு விண்ணப்பத்'தில் அடிகளார் அறிவித்திருக்கக்காண்கிறோம்.

இவ்வாறு உலகப் பற்றுகளை முற்றுந்துறந்த முனிவரான அவர்கூட, தமிழ்ப் பற்றை மட்டும் துறக்காதவராஞர்.

தாய்மொழி என்னும் காரணத்திற்காக மட்டுமே தமிழிடத்துப் பற்றுக்கொள்ளும் உலகியல் நியதியைக்கடைப் பிடிக்கும் நிலையில் அவர் இல்லை. என்றாலும் தாம் விரும்பிய மரணமிலாப் பெருவாழ்வை அடைவதற்குத்துணைபுரியும் சிறந்த கருவியாக தமிழ் மொழியை அவர் கருதி, ஆண்டவனுக்கு அடுத்தபடியாக தமிழிடத்து ஆழ்ந்த பற்றுக்கொண்டவராஞர். இதனை,

'பயிலுதற்கும் அறிதற்கு மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தால் கிடைத்த தென் மொழியொன்றினிடத்தே மனம் பற்றிச்செய்து அத்தென்மொழிகளால் பலவகைத் தோத்திரப்பாட்டுகளைப் பாடுவித்தருளினுர்,' என்று இறைவழிபாட்டுக்கென உரைநடையில் தாம் இயற்றிய சத்தியப் பெரு விண்ணப்பத்தில் அடிகளாரே அறிவிக்கின்றுர்.

தமிழ்மொழி, உலகியல் வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல், மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுதற்கும் பயன்படக்கூடியது என்று அறிவிக்கின்றுர் அடிகளார். 'தமிழ்' என்னும் பெயரில் தாம் எழுதியுள்ள வியாக்கியானக் கட்டுரையொன்றில் சுத்த. சித்தாந்த ரீதியில் 'தமிழ்' என்னும் மூன்றெழுத்துப் பெயருக்கு அடிகள் தந்துள்ள விளக்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

'மருளியற்கை மல இருளைப் பரிபாக சத்தியால் அருளொளியாக்கி, அதற்கு உள்ளீடான சிதாத்ம சித்கலா சத்தியென்னும் சுத்த ஆன்மாவானது தகர ககன நடன அருட்பெருஞ் சோதி என்னும் சுத்த சவானந்த பூரணத்தை சுத்த மோனதீத இயலால் அனுபவிக்கும் இயற்கை உண்மையே தமிழ் என்னும் சொற்பொருள் சுட்டினவாறு காண்க.'

'இதன் கருத்து யாதெனில், தமிழ்ப் பாஷையே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கும் என்பதாம்.'

இராமலிங்கர், மொழிகளுக்கெல்லாம்தந்தைமொழி தமிழ்மொழியே என்ற புதியதொரு கருத்தினை வெளிப்படுத்தி, அதனை ஆராய்ச்சி ரீதியிலும் உறுதிப்படுத்தியுள்ளார். தம்காலத்தில் அவர் ஆரம்ப காலத்தில் சைவசமயச் சார்புடைய பாடல்களையும் உரைநடை நூல்களையுமே இயற்றினுர். அவ்வகையில் அவரியற்றிய திருவருட்பா முதல் ஐந்து திருமுறைகளையும், மனுமுறைகண்ட வாசகம், தொண்டமண்டல சதக உரை, பெரிய புராணஉரை ஆகிய உரைநடை நூல்களையும் குறிப்பிடலாம். ஆனுல், இறையருள் கைவரப்பெற்ற பிற்காலத்தில் உள்ளொளி பெற்றவராகி, சமய வேற்றுமைகளைவெறுத்தும் மறுத்தும் 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' என்ற திருமந்திர நெறியில் நின்று புரட்சிப் பாடல்களைப் பாடினுர். அப்பாடல்களில் சமயச் சார்பற்றசமரசசுத்தசன்மார்க்க சமுதாயம்காண தமக்குள்ள விருப்பத்தை வெளிப்படுத்தினுர். 'ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை' என்ற புதிய கொள்கையைப் பறைசாற்றினுர். 'எம்மதமும் சம்மதம்' என்ற குரலெழுப்பி 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை' என்ற மந்திரத்தை முழங்கினுர். இவ்வழியில், புத்தம் புதிய புரட்சி இயக்கமொன்றையும் துவக்கி அதற்கு 'சமரசசுத்த சன்மார்க்க சங்கம்' எனப் பெயர் தந்தார்.

இந்தப் புதிய கொள்கைக்கும் கோஷத்திற்கும் விளக்கம் தரும் வகையில் அவர் இயற்றிய திருவருட்பா ஆறும் திருமுறைப்பாடல்களும், ஜீவகாருண்ய ஒழுக்கம், சன்மார்க்க விண்ணப்பங்கள் மகோபதேசம்என்ற உரைநடை நூல்களும் பத்... திருமுறையும் ... செல்வங்களாகும்.

ஆம். அகச்சமய — புறச்சமய இலக்கியங்களை மட்டுமே பெற்றிருந்த தமிழ்மொழி அருட்பிரகாசஇராமலிங்க வள்ளலாரால், சமயங் கடந்த சமரச நெறியைப் போதிக்கும்சுத்தசன்மார்க்க இலக்கியங்களையும் பெற்றது.

இது, பத்தொன்பதாம்நூற்றுண்டில் தமிழ்மொழியடைந்த மறுமலர்ச்சியாகும்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் உரைநடைத் தமிழை வளப்படுத்திய பெருமை இராமலிங்கர், ஆறுமுகநாவலர், மாயூரம் வேதநாயகம்பிள்ளை ஆகிய மூவருக்கும் உரியதாகும். இவர்கள் ஒரே தலைமுறையில் வாழ்ந்தவர்கள் என்றாலும் இம்மூவருள் முதன்முதலில் உரை நடைத் தமிழில் நூல் வெளியிட்டவர் வள்ளலாரேயாவார். அந்நூல், மனுமுறை கண்ட வாசகமாகும்.

இராமலிங்கர், தமக்கு முன் வாழையடி வாழையெனத் தோன்றிய புலவர் பெருமக்களை வாய்ப்புக் கிடைத்த இடங்களிலெல்லாம் பெரிதும் புகழ்ந்தும் போற்றியும் அஞ்சலி செய்துள்ளார்.

திருத்தொண்டர் புராணம் தந்த சேக்கிழார் பெருமானை, 'சேக்கிழாரென்னும் தெய்வப்புலவர்' என்றும், 'திருவருட் புலமை சான்ற சேக்கிழாரென்னும் பெரியர்' என்றும், 'சேக்கிழாரென்னும் பேரறிவுடைய பெரியர்' என்றும் மிகுந்த பக்தியோடும் பெருமையோடும் பெரிய புராண உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மூதாட்டியாம் ஔவைப்பெருமாட்டியிடம் அடிகளார் கொண்டிருந்த பக்தி எல்லையற்றதாகும். தமக்கு மந்திரோபதேசம் தந்த குருவாகவே ஔவையாரைக் கருதுகின்றுர் அடிகளார். அம்மூதாட்டியின் வெண்பா ஒன்றைத்தினமும் தாம் ஓதியதோடமையாது தம் நண்பர்களையும் ஓதுமாறு தூண்டினுர்.

அடிகள் தம் நண்பருக்கு எழுதிய கடிதமொன்றில் ஔவையாரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள பகுதி வருமாறு:-

'தாங்கள்அஞ்ச வேண்டாம்
சிவாயநமவென்று சிந்தித்
திருப்பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை
— உபாயம்
இதுவே மதியாகு மல்லாத
வெல்லாம்
விதியேமதியாய் விடும்.
என்ற ஔவையார் திருவாக்குசத்தியம்! சத்தியம்!! சத்திம்!!! ஆதலால்அதை விடாது சிந்தித்துக் கொண்டே வாருங்கள். தங்கள் பிணிகள் பறந்தோடிப்போகும். இதை நம்கவேண்டும். தாங்கள் பயபபடாதிருக்க வேண்டும்.'

சுருங்கச்சொன்னுல், தமிழ் மொழி எத்துணைத் துறைகளைக்கொண்டு விளங்குகின்றதோ அத்துணைத் துறைகளிலும் தொடர்புகொண்டு தம் தாய்மொழியை வளப்படுத்தி, அதற்கும் மரணமிலாப் பெருவாழ்வு தந்து தனிப்பெரும் புகழுடன் தமிழ்ச்சோலையிலே உலவுகின்றுர் வள்ளலார்.

## சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி

அட்டிவும் தன்ரைபாடு... என நாங்கள்...என்ன நாங்கள்...

பேடைக் கோழியின் இறக்கைகளுக்குள் அணைந்து கொண்டு முடங்கிக் கிடக்கும் குஞ்சுகளாக அவள் உடன் பிறப்புகளும் அவளும்...

விடிவெள்ளி பூத்த நேரம்-மங்கிய இருளில் வெறி கலைந்து-எழுந்து வருகிறுன் சின்னப்பன்.

நிசப்தம்.

சிறு விளக்கின் சிறு ஒளி.

அந்த ஒளியிலே அவன் இராசுவையும் மற்றக் குழந்தைகளையும் ஏறிட்டுப் பார்க்கின்றுன்...

அந்தக் காட்சி அவன் நெஞ்சில் உவகையாகிறது... உவகையோடு துயரமாகிறது...

'என்ன மனுசன் நான்...? சும்மா குடிச்சிட்டு இப்படித் திரிஞ்சா...? என்னமாதிரி எவ்வரை பிள்ளைகள் வாடியிட்டுதுகள்... அவளையும் போய்க் கனகாலம் பாத்து... கொஞ்சக் காசு கடன்பட்டு டாக்குத்தரையும் பாத்து சொல்லிக்கில்லிப் பாப்பம்... சுகமெடுப்பான்... நாளைக்குப் பாப்பம்... போய்... நாளைக்கு...'

ஃ ஃ ஃ

மாணிக்கம், படுக்கையில். அவளுடைய மயக்கமான உணர்வு நிலையில் ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் மறைகின்றன...

முதல் வெடி-
இரண்டாம் வெடி-
மூன்றும் வெடி-
,ஐயையோ...'

பள்ளத்தில் இருந்து மேட்டுக்கு ஏற முடியாமல், பசிக்களையிலே திராணியற்றுச் சோர்ந்து சுருண்டு விழுபவன் சின்னப்பனு...?

மரங்கள், தடிகள் கிலம் கிலமாகத் தூக்கி எறியப்படுகின்றன... அதோடு செங்குருதி வெள்ளத்திலே, மேட்டுப் பிரதேசத்தில்....

'இரத்தம்..இரத்தமா...?'

'என்ன-?இரத்தம்போலத்தி...?'

'இராசுவா...?'

'கனகமா...?,

'இராசு ... இல்லை... கனகம்...' இல்லை...இராசு...'

பயங்கர அலறல்.

எல்லாப் படுக்கைகளும் ஒரு கணம் கிறீச்சிடுகின்றன...பார்க்கக்கூடாததைப் பார்க்க விரும்பாமல், கிலிகொண்டு பரபரப்பு அடைபவர்களுமாக-

அவள் படுக்கையில் இரத்தம்.

கட்டடங்களைப் பிளந்தெறியும் ஓங்காளச் சப்தம்.

ஆஸ்பத்திரியில் பரபரப்பு-கால்சட்டையைச் சரிசெய்துகொண்டு ஓடும் டாக்டர்கள்...

... 'ஊசி'களும் கையுமாக வெண் உடை மோகினிகள்..

... ...

மாணிக்கம் செத்துப் பிழைக்கிறுள் ..

அவள் எண்ணங்கள்?
கனகமா-?
இராசுவா-?
சின்னப்பனு-?
இதில்-அவளைக் கொல்லும் கிருமிகள்-
-நோயா-
எண்ணங்களா-?
எது-அது?

[யாவும் கற்பனை]

## நல்லையின் செல்வம்

—வ. ஶ்ரீசர்மா —

வந்தனையா யன்புடனே வாழ்த்து மடியவர்தம்
புந்தியுறு மெக்குறையும் போக்கியே-சந்ததமு
எல்லில் வருகதிரி னேர்வதன மாறுகொண்டு
நல்லைதனில் வீற்றிருப்பான் நயந்து.

அடியவர் தங்கள் அகவிருளை நீக்கும்
நெடியவேல் தாங்குகைச் சேயே-பொடிபடவே
எல்லையி லென்துன்ப மென்றுநீ யிவதருள்
நல்லையிற் கந்தா நவில்.

ஐந்துமுகர் தந்த அறுமுகனே அடியார்கள்
பந்தமது நீக்கும் பரஞ்சுடரே-அந்தமிலா
சீர்நல்லை வாழுநற் செல்வமே நின்பாதம்
ஆர்வமொடு போற்ற வருள்.

## சகல போகமே யநள்வாய்

-காரை. செ சுந்தரம்பிள்ளை-

நல்லைப் பதியினி லேயிருந் தேயருள் பாலித்திடும்
தில்லைச சிவனருக் கேயுப தேசித்த தேசிகனே
தொல்லை யெழுந்தென துள்ள மழியும் பொழுதினிலே
வல்லவ னேவரு வாய்மயில் மீதில் வரந்தரவே

வேலே யெடுத்து வினையே யறுத்து விளங்குபுகழ்
மாலே நடுங்க மலரோ னொடுங்க வரைபிளந்து
காலே யனைய மயிலே பறந்து கடுவழிபோய்ச்
சேலே யனைய விழியா ளுவக்க மணந்தவனே.

ஃ

வேதமாகி வினைபோக்கு மாதிமுதலாக நிற்குமுருகா
நாதமாகி நரர்தேவ ரோடவுணர் நாவிலே நடமிடும்
போதமாகி மயில்மீதுலாவு புவிபோற்று மீசவுனையே
கீதமோது நல்லையிற் பணிந்தினிய வாழ்வினைப்
பெறுவனே

## நல்லூருறை குமரா!

-வே குமாரசாமி-

அசுரக்குணம், அடிமைத்தனே,
அவலச்செயல், கொடுமை,
சிசுகட்குறு கருமப்பிணி,
சிதையாப்பழி, கவலை,
பசலைத்துயர் முதலாமிவை
பலதும் உடன் கெடவே
விசும்பொத்தவ! விழிவேலொடு
வருவாயிளங் குமரா!

கமலத்திடை கருவாய்ச் சுடர்க்
கனலாய் அருட் கனியாய்
அமுதைத்தின மருந்தீஇ வளர்
அழகா! வடிவழகா!
அமரர்க்கருள் புரிவாய்எமக்
கருள்வாய் உயர்அருள்வாய்
தமருக்கொரு தமரேதமிழ்
நல்லூருறை முருகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆராய்ச்சிக் கண்ணோட்டம்

# இந்து சமயமா? சைவசமயமா?

— ந. சி. கந்தையாபிள்ளை —

இந்து சமயம் சைவசமயம் என்னும் சொற்கள் ஒரே பொருளில் வழங்குகின்றன. இவ்வாறு வழங்குதல் தவறு என ஒரு சாராரும், தவறில்லையெனப் பிறிதொரு சாராரும் கூறிவருகின்றனர். பள்ளிக்கூட மாணவர் பயிலும் நூல்களை எழுதும் நூலாசிரியர்களிடையும் இம்மயக்கம் இருந்துவருகின்றது. அவர்கள் தாமெழுதிய நூல்களுக்குச் சைவசமய பாடமெனவும் ''இந்து சமய பாட''மெனவும் பெயர்களிட்டிருக்கின்றனர். நூல் எழுதும் ஆசிரியர்களுக்கே இவ்வகை மயக்கமிருக்குமானுல் மாணவருக்கு ஏற்படும் மயக்கத்தைப்பற்றிக் கூறவேண்டியதில்லை.

சைவசமயம் என்பதற்கு, சிவபெருமானை முழுமுதற் கடவுளாகவும் சைவசித்தாந்தக் கொள்கைகளைத் தத்துவஞானமாகவும் ஏற்றுக்கொள்ளும் சமயமெனச் சுருக்கமாக வரைவிலக்கணங் கூறிவிடலாம். இந்து சமயம் என்பதற்கு எளிதிற் பொருள் கூற முடியாது. இந்துசமயமென்பதில் ஒரு சமயம் அடங்கவில்லை. அதில் பல சமயங்கள் அடங்கியுள்ளன. அச்சமயங்களிற் சில சைவசமயக் கொள்கைகளுக்கு மாறுபட்டவை. இந்து சமயமென்பதில் சைவசமயம் அடங்கும். சைவசமயமென்பதில் இந்து சமயமடங்காது.

இந்து என்னும் பெயர் அயல் நாட்டவர் பாரத நாட்டின் சிந்து நதியை அடுத்த நாடுகளைக் குறிக்க வழங்கிய பெயர். பாரசிகர் சிந்து நதியை அடுத்த பகுதிகளைச் சிந்து என்னும் பெயரிட்டு வழங்கினர். கிரேக்கர் இந்திய நாடு முழுவதையும் குறிக்க இந்து என்னும் பெயரை வழங்கினர்கள். இந்து பின் இந்தியாவாயிற்று. இந்துசமயம் என்னும் பெயர் முகமதியர் படையெடுப்புக்குப்பின் தொடங்கி ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் வேரூன்றிவிட்டது. தொடக்கத்தில் இது பிராமணர்களின் மதத்தைக் குறிப்பதாகவிருந்தது. முற்காலத்தில் விந்தியமலைக்கு வடக்கிலுள்ள நாடுகள் ஆரியாவர்த்தம் எனப்பட்டன. ஆரியாவர்த்தம் பிரமஸ்தான் எனவும் அறியப் பட்டது. பிரமஸ்தான பின் இந்துஸ்தானாக மாறியது.

இந்து மதம் என்பதற்கு ஒருவர் கூறியிருக்கும் வரைவிலக்கணம் வருமாறு:- ''முசிலிம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், பாரசிகம், யூதம் அல்லது உலகின் வேறு பாகங்களில் வழங்கும் பிறமதங்களைத் தவிர்ந்த இந்தியாவில் வழங்கும் உள்நாட்டு மதங்களெல்லாம் இந்து மதம் எனப்படும்.'' சோ. சிவசாமி ஐயர் இந்து சமயமென்பதற்குக் கூறியிருக்கும் விளக்கம் வருமாறு: ''மேல் நாட்டவர், இந்து சமயம் எனக் கூறும்போது சமயம், தத்துவஞானம், ஒழுக்க விதிகள், சட்டங்களைக் கருத்திற் கொள்கின்றனர். சில நூலாசிரியர்கள் ஒழுக்க விதிகளையும், சமயத்தையும் பிராமண மதமெனக் கூறியுள்ளனர். ஒழுக்க விதிகளையும் சமய நூல்களையும் சமஸ்கிருதத்தில் எழுதினோர் பெரும்பாலும் பிராமணர்களாகவிருந்தார்கள் என்பதிற் சந்தேகமில்லை. பழைய சமஸ்கிருத நூல்களிற் கூறப்பட்ட சமயக் கொள்கைகளையும், ஒழுக்க விதிகளையும் தழுவி ஒழுகும் மக்களின் சமயத்தை நாம் இந்து சமயமெனக் கூறுவோம்.''

இலங்கைப் பள்ளிக்கூட மாணவருக்கென எழுதப்பட்ட சமயபாட நூல்களில் சங்கரரின் ''நானே பிரமம்'' என்னும் ஏகான்மவாதக் கொள்கைகள் இடம்பெற்றிருந்தன. ஏகான்மவாதக் கொள்கை சைவத்துக்குப் புறம்பானது. ஆகவே சங்கரரின் ஏகான்மவாதக் கொள்கைகள் பாடப் புத்தகங்களிலிருந்து நீக்கப்படவேண்டுமெனக் கிளர்ச்சிகளிருந்தமையால் அப்பகுதிகள் நீக்கப்பட்டன. சைவசமயம் ஒப்புக்கொள்ளாத ஆடு மாடுகளை வெட்டிப் பலியிட்டு வழிபடு[illegible] வழிபாடு [illegible] இந்துமதம் என்னும் தொகுப்பு மதத்தில் சேர்ந்துள்ளனவென்பது நன்கு விளங்குகின்றது. சைவசமயத்தை இந்து சமயமென வழங்குவது பொருத்தமற்றது. சைவசமயமென்பதை இந்து சமயமெனத் தவறுக வழங்கிவந்தாலும் அதனைத் திருத்திக்கொள்ளலாம். சைவசமயத்தை நாம் இந்து சமயமெனக் கூறினுல் அச்சமயக் கொள்கைபற்றி எழுப்பப்படும் பல கேள்விகளுக்கு விடையிறுப்பது கடினமாகும்.

நம்மவர்கள் வரலாற்று ஆராய்ச்சியைப்பற்றி அதிக கருத்து எடுப்பதில்லை. பள்ளிக்கூடங்களிற் பயிலப்பட்டு வரும் சாதாரண பாடப்புத்தகங்களில் காணப்படும் சமயசம்பந்தமான நூல்களைப்பற்றிய வரலாற்றுக்கும், சமயபாடமாக எழுதப்பட்டுள்ள வரலாறுகளுக்குமிடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உண்மை ஒருவகையாகத்தான் இருக்க முடியும்; இரண்டுவகையாக இருக்க முடியாது. அறிஞர் எழுதியுள்ள கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து உண்மைகளை உள்ளவாறு வெளியிடுதல் விரும்பத்தக்கதாகும்.

## 'கோவிற் கடவை'

ஈழத்தில் ஏற்பட்ட ஒற்றுமைக் குறைவான சந்தர்ப்பங்களில் பல்லவர், சோழர் ஆட்சி இங்கு ஆதிக்கம் பெற்றது. இலங்கையில் சிலகாலம் சோழப் பேரரசின் ஆட்சி நிலைபெற்றிருந்தது. அப்போது நாட்டின் பல்வேறு இடங்களிலும் சைவ ஆலயங்கள் எழுந்தன. பொலனறுவையில் இப்போது காணப்படும் சிவன்கோவிலும் இன்னும் பழுதுற்ற நிலையில் காணப்படும் ஏனைய கோவில்களும் சனசஞ்சாரமற்ற மறைவிடங்களில் ஆங்காங்கு தேடுவாரற்றுக் கிடக்கக் கண்டெடுக்கப்படும் சிவலிங்கங்களும் இதற்குச் சான்று பகருகின்றன.

ஒன்பதாம் நூற்றுண்டில் மாவிட்டபுரம் முருகன் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. சோழப்பேரரசின் தேசாதிபதி திசை உக்கிர சோழன் மகள் மாருதப்புரவல்லியின் குன்மநோய் நீங்கியஇடம் ஆதலின் இது மாவிட்டபுரம் ஆனது என்பர். திசை உக்கிரசோழன் சோழ தேசாதிபதி என யாழ்ப்பாணவைபவமாலை கூறுகின்றது. இதனை விடுத்து மதுரை மன்னவன் உக்கிரப் பெருவழுதி என அவனைச் சிலர் குறிப்பிடுவர். இது பொருந்தாக் கூற்று என்பதே பலருடைய முடிவுமாகும். சோழர் ஆட்சிக்கான எட்டாம் நூற்றுண்டிலேதான் மாவிட்டபுரம் ஆலயம் எழுந்தது. திசைஉக்கிரப் பெருவழுதி எனப் பாண்டிய மன்னன் இருந்திருப்பின் இத்தலம்பன்னிரண்டாம் நூற்றுண்டாகிவிடும். திசைஉக்கிர சோழனை சோழத்தேசாதிபதி என யாழ்ப்பாண வைபவமாலை கூறுவது போலவே நாமும் கொள்வது பொருத்தமுடையதாகும்.

கீரிமலை, காங்கேசன் துறை, மாவிட்டபுரம் ஆகிய மூன்று தலங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. இந்த உண்மையை எவரும் மறுக்க முடியாது. பண்டு தொட்டே தொடர்புள்ள இப்பகுதி கோவிற்கடவை என்று அழைக்கப்படுவது பொருத்தமுடையதே. இங்கு ஏராளமான ஆலயங்கள் இருப்பதனைக் கொண்டு இப்பகுதி கோவிற் கடவை எனப் பெயர் பெற்றிருக்கிறது.

— 'கோவிற் கடவை' என்னும் நூலிலிருந்து.

## நால்லூர் நான்மணி மாலை

வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் நல்லைக்கந்தன் மீது நாற்பது பாக்களை ஆசிரியர் சொக்கன் தீட்டியிருக்கிறார். கந்தன் கவினும் கருணையும் படிப்போர் மனதைக் கவர்ந்திட நல்லூர் நான்மணிமாலை தீட்டப்பட்டுள்ளது. செந்தமிழ்வித்தகர் திரு. வி. க.வின் கட்டுரையும் சுப்பிரமணியக் கடவுள் என்றகட்டுரையும் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ் நூல்களெல்லாம் போற்றிப்புகழும் முருகனை திரு. சொக்கன் பழமையும் புதுமையும் கூட்டிப்பக்திச் சுவையுடன் பாடியிருக்கின்றார். இந்நூல் கிடைக்கு[illegible] விலை சதம் 50.




குறள் விளக்கம்

# நில்லாத செல்வம்

— பொ. சண்முகநாதன் —

அது வள்ளுவர் குறள் எழுதிக்கொண்டிருந்த காலம்! 'நிலையாமை' என்ற அதிகாரத்தை அவர் எழுதிக்கொண்டிருந்தபோது ஒருவரிடத்தில் செல்வம் வந்து நிலையாமல் போவதற்கு ஓர் உவமை தேடியாகவேண்டிய நிலை!

நெடுநேரம் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்த வள்ளுவருக்கு திடீரென்று முதல் நாள் பார்த்த கூத்து நினைவிற்கு வருகிறது. கூத்திலும் பார்க்க அந்தக் கூத்துக்கு வந்த கூட்டத்தின் காட்சிதான் அவர் மனதில் பசுமையாக நிலை பெற்றிருந்தது.

கூத்து ஒரு பிரபல அங்காடியில் பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெறுவதாக இருந்தது. இரண்டு மணியிலிருந்தே மக்கள் அங்கு ஒன்று இரண்டாகக் கூடத் தொடங்கினர். மூன்று மணிக்கு ஐந்து நிமிடம் இருக்கும் போது மக்கள் சாரி சாரியாகவே வரத் தொடங்கிவிட்டனர். சரியாக மூன்று மணிக்கு கூத்து ஆரம்பமாகும்போது எள் போட்டால் எள் விழாதவாறு அவ்வளவு கூட்டம் அந்த மைதானத்தில் நிறைந்திருந்தது.

கூத்து முடிவடையும்வரை ஆடாது அசையாது அமைதியாக இருந்து கூத்தை ரஸித்த மக்கள், அது முடிந்ததும் எல்லாரும் ஒன்றுகவே எழுந்து அப்படியே புறப்பட்டுவிட்டனர்.

வள்ளுவரும் வேறு அலுவலாக எங்கோ போய்விட்டு திரும்பவும் கூத்து நடந்த அதே இடத்தால் வரும் போது அந்த அங்காடி வெறிச்செனக் காட்சியளித்தது.

இப்பொழுது வள்ளுவர் கூத்தில் கண்ட மேற்படி காட்சியையே உவமையாக வைத்து, செல்வம் ஒருவனிடத்தில் வந்துபோகும் தன்மையைப் பாடலானுர்.

ஒவ்வொன்று ஒவ்வொன்ருகக் கூத்தைக் காண வந்து சேரும் கூட்டம், கூத்து முடிந்ததும் எப்படி ஒன்ருகவே வெளியேறுகிறதோ அப்படியே ஒருவனிடத்தில் சிறிது சிறிதாகச் சேரும் செல்வமும் ஒரு நாளைக்கு நீங்கிப் போகலாம்.

திடீரென்று இப்பொழுது ஏழைகளாகிவிட்ட பெரும் பெரும் பணக்காரர்கள் எல்லாரும் ஆரம்ப காலத்தில் சிறிது சிறிதாகச் சேர்த்தே செல்வந்தர்கள் ஆனுர்கள் என்பதை நாம் அநேகமாக அன்றுட வாழ்வில் காணக்கூடியதாக இருக்கிறது. இதைப் பார்க்கும் போதுதான் வள்ளுவரின் உவமை வியந்து வியந்து போற்றக் கூடியதாக இருக்கிறது.

வள்ளுவரின் அந்தக் குறள் இதோ:-

''கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ் செல்வம்
போக்கும் அது விழிந்தற்று''

## அணு குண்டு விழுந்தால் என்ன செய்வது?

### சுவீடனில் பயிற்சி

அணுஆயுதப்போர்விளைவுகளை எதிர்த்துப் போராட சுவீடன் நாட்டினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

'போர்வருமானுல்' எனும் தலைப்பில் மக்கள் தற்காப்பு நிறுவனம் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளது. இதில் கதிரியக்கத் தூசியிலிருந்து எப்படித் தப்பிக்கலாம் என்பது பற்றியும், நகரைச் சிறந்த முறையில் எப்படிக் காலிசெய்வது என்பதுபற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

இப்போது அதே நிறுவனம் 'கதிரியக்கத்திற்கு எதிரான பாதுகாப்பு' எனும் தலைப்பில் 50 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகத்தை அச்சிட்டுள்ளது. இது அவசியமானுல் எல்லாக் குடும்பங்களுக்கும் அனுப்பப்படும்.

அணுக்குண்டு வெடிப்பை அனைத்திற்கும் அந்தமனம் என்று கருதவேண்டிய அவசியமில்லை என்று அது தெளிவாக்குகிறது.

கதிரியக்கத்திற்கு அது தோன்றிய இருவாரங்களுக்குப் பின் முதலில் இருந்த சக்தியில் ஆயிரத்தில் ஒரு பங்கே இருக்கும் என்று அது கூறுகிறது.

எனவே ஆரம்ப நிலையில் நன்கு பாதுகாத்துக்கொள்வது அவசியம் என்று அது கூறுகிறது.

மேலும் அது கூறுவதாவது: கதிரியக்கம் தொலைதூரம் செல்லச்செல்ல வலு இழக்கும். இந்தக் கதிரியக்க ஒளிக்கற்றைகளில் பாதி தனக்கு 24 அடி தூரத்திற்குள் வருபவர்களையே பாதிக்கும்.

(பொதுமக்கள் கருதுகிறபடி) பாதுகாப்புக் குழியில் பதுங்கிக்கொள்வது பாதுகாப்புத்தராது. மாருக கட்டிடங்களின் மையத்தில் இருப்பதுதான் பாதுகாப்பு. ஜன்னல் அருகிலும் உயரே சிலிங் அருகிலும் இருத்தல் கூடாது.

## முகத்தில் 30 ஆயிரம்!

மனிதனின் முகத்தில்ஏறக்குறைய 30,000 மயிர் முளைக்கிறது. ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்கு ஓர் அங்குலத்தில் 50-ல் ஒரு பங்கு நீளம் வளர்கின்றது. முகத்தில்தான் ஆண்களுக்கு அடர்த்தியாக மயிர் வளர்கிறது.

மனிதனின் மீசை மயிரும் அதே அளவு கனமுள்ள செம்புக்கம்பியும் சமபலம் உடையவை. அடிக்கடி முகச்சவரம்செய்வதால் மயிர் நன்ருக வளரும் என்ற நம்பிக்கைக்கு ஆதாரம் இல்லை.

வயது உயர உயர மயிர் தடிக்கும்.

இதில் ஒரு ரகசியம், தலை வழுக்கையான பின்னும் தாடி மட்டும் ஏன் வளர்கிறது என்பதுதான்.

நீரழிவாற் துன்பப் படுகிறீர்களா?

துன்னலை வடக்கு மிந்திரன் அம்மன் கோவிலடியிலிருக்கும்
சச்சிதானந்த
வைத்தியசாலைக்குச் செல்லுங்கள்
ஆயுர்வேத வைத்தியர்
பொ. ஸ்ரீபதிசர்மா
அவர்களுடன் ஆலோசியுங்கள்
பல வருடஞ்சென்ற நோயானுலுஞ் சிலநாட் சிகிச்சையிற் குணமடைவீர்கள்

நீரழிவுக்கு ஷெ வைத்தியரிடஞ் சிகிச்சைபெற்றுச் சிலநாட் சிகிச்சையிற் பூரண சுகமடைந்தமையால் என் போன்ற வியாதியஸ்தர்களின் நலங் கருதி இதனை வெளியிடுகின்றேன்.

ஸ்ரீமதி செ. கந்தசாமி
(இளைப்பாறிய ஆசிரியை)
துன்னலை வடக்கு,
கரவெட்டி, 25-7-65.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கதை (ஆங்கில மூலம்)

# சிறுபொறியும் வீட்டை எரிக்கும்

— திருமதி அ. மயில்வாகனம் —

'நான் அப்படி ஒன்றையுங் காணவில்லை. எங்கள் கோழிகள் எப்பொழுதோ முட்டை இடத் தொடங்கி விட்டன. நாங்கள் முட்டைகளைச் சேகரிக்கிறோம். பிறருடைய முட்டைகள் எங்களுக்குத் தேவையில்லை, நாங்கள் பிறர் வளவுகளுக்குள் முட்டை தேடிப்போகவில்லை!' என்றாள் கேபிரியலின் தாய்.

இதைக்கேட்ட அந்த இளம் பெண்ணுக்குக் கோபம் வந்தது. ஆகையால் அவள் தேவைக்கதிகமாகப் பேசிவிட்டாள். கிழவியும் பதிலுக்குப் பேசினாள். இருவரும் சத்தமிட்டுப்பேசினர். அப்பொழுது தண்ணீர் அள்ளும் பொருட்டு ஐவனுடைய மனைவி அங்கே வந்தாள். அவளும் அவர்களுடன் சேர்ந்து சத்தமிட்டாள். கேபிரியலுடைய மனைவி வீட்டுக்குள் இருந்தவள் வெளியே ஓடி வந்து ஐவனுடைய மருமகள்மீது இல்லாததும் பொல்லாததுமான பல குற்றங்களைச் சுமத்தினாள். சச்சரவு முற்றித் தகாதவார்த்தைகளைப் பேச முனைந்தார்கள். எல்லோரும் ஒருமித்துச் சத்தமிட்டனர்.

'நீ அப்படி!', 'நீ இப்படி!' 'நீ களவெடுக்கிறவள்!' 'நீ ஒரு கெட்டவள்!', 'நீ உன் கிழ மாமனுக்கு உணவு கொடுக்காமற் சாகடிக்கிறாய்!' 'நீ ஒன்றுக்கும் உதவாதவள்!' 'நான் உனக்குத் தந்த அந்தப் பையிலே நீ ஒரு துவாரம் உண்டாக்கி இருக்கிறாய்!', 'நீ பாகை கொண்டு செல்வது எங்கள் வாளிகளில்—நீ அவற்றை எங்களுக்குத் திருப்பித்தரவேண்டும்' என்றிவ்வாறு சண்டையிட்டனர்.

பின்னர் வாளிகளைப் பிடித்து இழுத்துப் பாகை எங்கும் ஊற்றி ஒருவர் மயிரை ஒருவர் பிடித்து அலங்கோலப் பட்டனர். கேபிரியல் வயலில் இருந்து திரும்பிவந்தவன் மனைவிக்கு உதவியாக நின்றான். இதை அறிந்த ஐவனும் மகனும் வெளியே விரைந்து மற்றவர்களுடன் சேர்ந்தனர். ஐவன் பலவானுகையால் எல்லோரையும் ஓடச்செய்தான். கேபிரியலுடைய தாடியிலிருந்து ஒரு கை நிறைந்த கேசம் பிடுங்கினான். சனங்கள் எல்லோரும் விஷயம் என்ன என்று அறிவதற்கு அவ்விடத்து வந்து சேர்ந்தார்கள். சண்டையிட்டவர்களைச் சமாதானப் படுத்த நீண்ட நேரம் சென்றது.

கேபிரியல் பிடுங்கப்பட்ட கேசத்தை ஒரு துண்டுக் கடதாசிக்குட் பத்திரப் படுத்தி வைத்துப் பெரிய கோர்ட்டில் வழக்கு வைத்தான். 'என் தாடியைக் குருபியாக ஐவன் பிடுங்குவதற்காக நான் வளர்க்கவில்லை', என்று அவன் கூறினான். அவனுடைய மனைவி அயல் வீடுகளுக்குச் சென்று ஐவனைச் சைபீரியாவுக்கு அனுப்புவார்கள் என்று கதைஅளந்தாள். ஆகையாற் சண்டை மேலும் வளர்ந்தது

ஆரம்பத்திற் தொடக்கம் ஐவனுடைய தகப்பன் குடும்பங்களைச் சமாதானமாக இருக்கும்படி கூறிவந்தான். ஆனால் அவன் சொல்லை எவரும் சட்டை செய்யவில்லை. நீங்கள், செய்வது மூடத்தனமான ஒரு காரியம் — எண்ணிப் பாருங்கள்! எல்லாம் ஒரு முட்டையில் இருந்து தொடங்கியது. ஒருவேளை பிள்ளைகள் அதை எடுத்திருக்கலாம். ஒரு முட்டையின் விலை என்ன? ஒவ்வொருவருக்கும் இறைவன் போதியளவு கொடுக்கிறார். ஒருவேளை உன் அயலான் தகாத அன்பில்லாத வார்த்தைகளைப் பேசி இருக்கலாம்-அவன் நல்லனவற்றைச் சொல்லும்படி கற்றுக்கொடு! எல்லோரும் பிழைகள் செய்வதுண்டு. அவற்றை மறந்து விட்டால் நன்மை உண்டாகும்! கோபம் மேலிட்டுவிட்டால், உன் குடும்பத்திற்கே கெடுதி உண்டாகலாம்' என்றெல்லாம் ஐவனுடைய தகப்பன் புத்திமதிகள் கூறினான்.

என்னதான் கிழவன் சொன்ன போதும் வயதிற் குறைந்த அந்தக் குடும்பத்தினர் அவனுடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை.

ஐவன் தன் அயலவனுக்கு முன்னே வெட்கமடைய விரும்பவில்லை.

'நான் தாடியை இழுக்கவில்லை, அவனே இழுத்துக் கேசத்தைப் பிடுங்கினான், அவனுடைய மகன் என் உள்ளங்கியில் உள்ள பித்தான்களை அறுத்து அங்கியையும் கிழித்து விட்டான் —பார்' என்று ஐவன் தகப்பனுக்குக் கூறினான். அவனும் சட்டத்தை நாடிச் சென்றான்.

வழக்கு, சமாதானநீதிபதி ஒருவரினால் விசாரிக்கப்பட்டது. பெரிய கோர்ட்டிலும் விசாரணை நடந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், கேபிரியலுடைய வண்டியில் இருந்து பெரியதோர் இரும்பு ஊசி காணாமற் போய்விட்டது. அவனுடைய உறவினன் ஒருவன் ஐவனுடைய மகன் அதை எடுத்து விட்டான் எனச் சொன்னான். அவனுடைய குடும்பத்தினர் ஐவனுடைய மகன் தங்கள் பன்னையைத் தாண்டி வண்டியை நோக்கிச் சென்றதைக் கண்டதாகச் சொன்னார்கள். அந்த ஊசியை அவன் ஒரு விடுதிக்காரனுக்குக் கொடுத்ததை ஒரு அயலான் கண்டு வந்து தங்களுக்கு முறையிட்டதாகவுஞ் சொன்னார்கள்.

இந்தக் குற்றத்திற்காகவும் கேபிரியல் சட்டத்தை நாடினான். வீட்டில் எந்த நேரமும் சண்டையும் சச்சரவுமாக இருந்தது. பிள்ளைகள் கூட ஒருவரையொருவர் ஏசுப்பட ஆரம்பித்தனர். தங்கள் பெரியோர்களைப் பின்பற்றி அப்படி நடந்துகொண்டார்கள். பெண்கள் ஆற்றங்கரைக்குத் துணிகழுவச் செல்லும்போது, அவர்

(9-ம் பக்கம் பார்க்க)

## வேலை விளையாட்டு

—ச. வே. பஞ்சாட்சரம்—

மாலன் எடுவுன் குத்தூசி
வாசன் வாங்குன் குத்தூசி
சேலன் தூக்குன் குத்தூசி
சேர்ந்து நாங்கள் வெம்புவோம்.

ஆலம் நிழலுக் கோடுவோம்
ஆலஞ் சருகு பொறுக்குவோம்
நாலு பேரும் உட்கார்ந்து
நல்ல கதைகள் சொல்லுவோம்.

அரசம் நிழல் அடைகுவோம்
அரசஞ் சருகு குத்துவோம்
அரிசி இன்றிச் சோறு நாம்
ஆக்கி அங்கு உண்ணுவோம்.

மாமரத்துக் கோடுவோம்
மாம்பழத்தைப் பொறுக்குவோம்
சாமி வைத்துப் பூசையும்
[illegible]ழங்கிச் செய்குவோம்.

ஆடு வீட்டில் நின்றிடும்
அதற்குஞ் சருகு போடுவோம்
மாடு வயலில் நின்றிடும்
வந்த தற்கும் கொட்டுவோம்.



# சிறுவர் பூங்கா

## இடைவிடாது படிக்கிறார்!

விருந்தாளி: (வீட்டுக்காரரின் புதல்வியைக் கண்டதும், அவரிடம் கேட்டார்) உங்கள் மகள் என்ன படிக்கிறாள்?

சிறுமியின் தந்தை: இடைவிடாது 'ஈழநாட்டை'யே படிக்கிறாள்.

அனுப்பியவர்:
வ. இராதாகிருஷ்ணசர்மா,
குடியிருப்பு,
சுழிபுரம்.

# சிந்தையைக் கவரும் காட்டுப் புஷ்பங்கள்

— தென்புலோலி பொ. கோபாலகிருஷ்ணன் —

"கானகத்திலே பெய்த மழை", "காட்டிலே பூத்த மலர்" என்றால் அவை உபயோகப்படாதவை, பயனற்றவை என்பதுதான் அர்த்தம். ஆனால் கானகத்திலே பூக்கும் மலர்களை, இன்று நேற்றல்ல, இற்றைக்கு எத்தனையோ, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த புலவர்களும், மன்னர்களும் இயற்கையழகையும் குறிப்பாக, அதற்கு மெருகூட்டும் மலர்களின் அழகையும் நன்றாக ரசித்து அனுபவித்தார்களென்பது, அவர்கள் விட்டுச் சென்ற இலக்கிய வர்ணனைகளிலிருந்து அறியக்கூடியதாகவுள்ளது.

பெண்ணைப் பூப்போன்ற மெல்லியலாரென்றும், ஆணை அதை நோக்கிச் செல்லும் வண்டு என்றும் வரும் சந்தர்ப்பங்கள் இலக்கியத்தில் பலவுள. மலர் போன்ற பாதங்கள், முல்லைச் சிரிப்பு, தாமரை முகை போன்ற தனங்கள்- இங்கேயெல்லாம் மலர்கள் உவமானப் பொருளாகக் கையாளப்பட்டுள்ளன. இறைவனை அர்ச்சிக்கவும், மங்கையரின் கருங்கூந்தலிலே வீற்றிருக்கவும், மன்னர்களின் மார்பிலே புரளவும், கொடுத்து வைத்த இம்மலர்கள், உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள் தாம்.

இவ்வாறு இலக்கிய ரசனை போலும், கற்பனைக் கண்ணோடும் மலர்களை நோக்கினால் நாம் அவற்றிலிருந்து சிந்தும் தேனை உண்ணும் வண்டுகளாகிவிடுவோம். அல்லாமலும் இவற்றை "தாவரவியல்" கண்கொண்டுபார்த்தால் நாம் ஒரு கண்டுபிடிப்பாளராக மாறிவிடலாம். காட்டுப் புஷ்பங்களைச் சேகரித்தல் ஒரு சிறந்த பொழுது போக்கு.

பொழுது போக்கு என்று கூறிக்கொண்டு, பல நூற்றுக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து, அவற்றிற்கென பிரத்தியேக உடைதைத்து அணிந்துகொண்டு விளையாடும் டென்னிஸ் பந்தாட்டம் போன்றவை பொழுதுபோக்கல்ல. நிறைவான சாதாரண குடியான வன்தொடக்கம், பணமுடையவர்வரை அனுபவித்து ரசிக்கக் கூடிய "காட்டுப் புஷ்பங்கள்" சேகரித்தல் உண்மையிலேயே ஒரு செலவு குறைந்த, சந்தோஷம் நிறைந்த பொழுது போக்காகும்.

பல்வேறு பூக்களைத் தரிசிப்பதற்கும், அவற்றைப் படம் பிடிக்கவும், சேகரிக்கவும் நாம் பல்வேறு சுற்றுடலுக்குச் செல்லவேண்டியிருக்கும். புற்றரைகள், ஆறு, குளம் முதலியவற்றின் கரைகள், குளங்கள், அடர்ந்த காடுகள் முதலியன இவற்றுள் சில. பெரிய மரங்களான "எலும்புருக்கி" போன்ற மரங்களிலிருந்து சிறு கொடிகளான "கறுத்தப் பூங்கொடி" போன்றவையின் மலர்கள் மிகவும் கவர்ச்சிகரமானவை. இவை தவிர, மரங்களிலே தொங்கிக்கொண்டிருக்கும் "ஒக்கிட்டு" என்னும் வகைப் பூமரங்களின் பூக்கள், மிகவும் ரம்மியமான வாசனையுடன், அழகான தோற்றமுடையவை. பனங்கற்றாழை, கற்றாழை போன்றவை இந்த இனத்தைச் சார்ந்தவை. பூக்களின் கவர்ச்சி, அவற்றின் வாசனையிலும், நிறத்திலுமே தங்கியுள்ளது. சிவப்பு, நீலம், வெள்ளை போன்ற பல்வேறு நிறங்களுடன், ரம்மியமான வாசனையும், கெட்டவாசனையுமுடைய பூக்களுமுள. பூக்களின் இந்த வாசனைகளெல்லாம், வண்டுகளை அவற்றை நோக்கிக் கவருமுகமாகவே அமைந்துள.

பூக்களின் அழகை அனுபவிக்கத் தொடங்கிவிட்டால், சாதாரணமாக வீட்டிலிருந்து வெளியேறியவுடனேயே எமது ஆராய்ச்சி தொடங்கிவிடும். புற்றரை என்று ஒருவருடைய கண்ணுக்குத் தெரியும் நிலம் எங்கள் கண்ணுக்கு ஒரு ஆய்வு கூடமாகத் தோன்றும்.

இனி காட்டுப் பூக்களைச் சேகரிப்பது, பாதுகாப்பது எப்படி என்பதுபற்றி ஆராய்வோம்.

பல்வேறு சுற்றுடல்களுக்குச் சென்று எங்களுக்குப் பிடித்தமான மலர்களையும் அவற்றைச்சேர்ந்த இலைகளையும் "வாஸ்குலம்" என்கிற சேகரிப்புப் பெட்டிக்குள், எடுத்துக்கொண்டு ஆய்வு கூடத்தை அடையலாம். அடுத்ததாக சேகரித்த மலர்களைப் பாதுகாத்துப் பத்திரப்படுத்த வேண்டும். முதலாவது 16" நீளமும் 10" அகலமுமான சாதாரண ஒற்றுத்தாள் அல்லது பத்திரிகைத்துண்டுகள் வெட்டிக்கொள்ளவேண்டும். இவற்றிலுள்ள மயிர்த்துளாய்கள் நீரைச்சீக்கிரம் உறிஞ்சக் கூடியன. பின்பு மலரையும் அதைச்சேர்ந்த பகுதிகளையும், மேற்கூறிய இரு பேப்பர்களுக்கிடையில் வைக்கவேண்டும். வைக்கும் போது, இலைகளை நன்றாக விரித்தும், பூக்களையும் அழகாக நேர்படுத்தியும் விடவேண்டும். பின்பு மேலும் இரு ஒற்றுத் தாள்களை வைத்து, அவற்றின்மேல் பாரம் ஏற்றிவிடவேண்டும். இதற்கு அமத்துப் பலகை

(9-ம் பக்கம் பார்க்க)

வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

வலிமை
குளிர்மை
சிக்கனம்
இவற்றிற்கு

பிரசித்தி பெற்ற யானை மார்க்
அஸ்பெஸ்ரஸ்
கூரை சீற்றுக்களையே உபயோகியுங்கள்.
கிடைக்குமிடம்:
சண்முகம் ஸ்ரோர்ஸ்
( யாழ் நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள் )
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளபளப்புடன் திகழ...

— செல்வி. வே. ஜெயலட்சுமி —

உங்கள் சமையலறை மேசையின் மேல் ஒரு அஸ்பெட்டாஸ் சீட்டை ஆணியால் அடித்து, பாத்திரங்கள் சூடாக இருக்கும் பொழுது அவற்றை இதின் மேல் வைத்தால் அஸ்பெஸ்டாஸ் ஷீட்டின் மேல் கறைபடாது. வேலை எல்லாம் முடிந்த பிறகு ஈரத்துணியால் அதைத் துடைத்துவிடுங்கள்.

○

பருத்தித்துணிகளை அலசுகையில், சிறிது காடிநீரைத் தண்ணீரில் சேர்த்துக்கொண்டால் அவற்றின் சாயம் நீங்குவதில்லை. சாயமேற்றும் பொழுதும் காடியைச் சாயத்துடனும் துணிகளை அலசும் பொழுதும் சேர்த்துக்கொள்ளலாம்.

○

வர்ணமான கொசுவலைகளைச் சுத்தம் செய்வதற்கு முதலில் அவற்றை மெதுவாக உதறிவிட்டு, பின் கொஞ்சம் தவிட்டை இளஞ்சூடாக்கி அவற்றின் மேல தேய்க்கவேண்டும். வெளியே காற்று வீசும்போது அவற்றைக் குலுக்கி தவிட்டை இலகுவில் அகற்றிவிடலாம்.

○

விரல் நகங்கள் கறைபட்டிருந்தால் கொஞ்ச வெந்நீரில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து நகத்தை தோய்த்து எடுங்கள். உங்களுடைய விரல் நகங்கள் ஒடியக்கூடியதாகவும் மென்மையாகவும் இருந்தால் ஆலிவ் எண்ணெயை இளஞ் சூடாக்கி, நகத்தின் மீது தேய்த்து வாருங்கள்.

○

காஸ் ஸ்டவ்வின்மீதுஇருக்கும் கறையைப் போக்க ஆளிவிதை எண்ணெயைத் துணியில் தோய்த்து தேயுங்கள்.

○

நாற்காலிகள் தட்டுமுட்டுச் சாமான்கள் மேலிருக்கும் எண்ணெய்ப் பசையை போக்குவதற்கு அவற்றின் மீது வழக்கமாகத் தேய்க்கும் பசையுடனே சிறிது 'மெதிலேடட் ஸ்பிரிட்' சேர்த்துக்கொள்ளலாம்.

○

கையில் பட்ட கிரீஸ் அல்லது வார்னிஸ் கறையைப் போக்க ஒரு ஆரஞ்சு அல்லது எலுமிச்சம் பழத்தோலை தேய்க்க வேண்டும். தோலில் உள்ள எண்ணெய் கிரீஸை எடுத்துவிடும்.

○

மரக்கட்டையில் ஆணி அடிக்க வேண்டி இருக்கும் போது அதை முதலிலே ஒரு சலவைச்சோப்பில் முதலில் குத்திஎடுத்து, பின்பு அறைந்தால் லேசாக இறங்கும்.

○

தக்காளிப் பழங்களைத் தோல் உரிப்பதற்கு கொதிக்கிற வெந்நீரில் அவற்றை ஒருமுறை போட்டு, ஒரு நிமிஷம் கழிந்ததும் எடுத்து குளிர்ந்த தண்ணீரில் போடவும். பின் எடுத்து தோல் உரிக்க இலகுவாகஇருக்கும்.

○

மரத்தூளுடன் காடி நீர் (Vinegar) சேர்த்து பசை போலாக்கி இந்தப் பசைக்குள் கத்தியின் கைப்பிடியை மூன்று முதல் நாலு மணி நேரம் வைத்திருந்து பின்பு பசையை அகற்றி சுத்தம் செய்ய கத்தியின் கைப்பிடி மினுங்கும்.

○

சவரபிளேடுகளின் ஒருபக்கத்தை பிளாஸ்டரினுல்




ஒட்ட வைத்து கெட்டியாக்கினுல் பென்சில் சீவ அதை உபயோகிக்கலாம்.

○

காய்கறிகளின் சாறு, வர்ணம், மசிக்கறை முதலியவற்றைப் போக்குவதற்கு குளிர்ந்த நீரில் மரச்சாம்பலை உபயோகித்துப் பாருங்கள். வர்ணத்தைப் போக்க டர்பன்டைனையும் சேர்த்துத் தடவி வெந்நீர்உபயோகித்து காரியாலிக் சோப்பினுல் கழுவ வேண்டும். எலுமிச்சம்பழச்சாறு இவைகளைப் போக்க மிகவும் உகந்தது.

## இல்லற வகுப்புகள்

மேற்கு ஜெர்மனியில் வயது வருமுன் திருமணம் செய்துகொள்ளுபவர்கள் தொகை அதிகரித்துவருகிறது. அங்கு 1938-ம் ஆண்டிற்குப் பிறகு 20 வயதிற்குள் திருமணம் புரியும் ஆண், பெண்களின் எண்ணிக்கை 10 மடங்குக்குமேல் உயர்ந்திருக்கிறது. அதே வேளையில் புதுமணத் தம்பதிகளின் ''விவாகரத்து''ம் பெருமளவில் பெருகிவருகிறது.

''விவாகரத்து'' ஏற்படுவதைத் தடுப்பது ஒரு சமூகச் சிக்கலாகவே இருந்துவருகிறது.

எனினும் இவ்விவாகரத்து நிகழ்வதை ஒழிப்பதற்கு சென்ற வருடம் மேற்கு ஜெர்மனி அரசாங்கம் ஒரு புதிய திட்டமொன்றை ஏற்படுத்தியது. அத்திட்டத்தின்படி இளந் தம்பதிகளுக்கு குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தைப்பற்றி பொதுவாக— இல்லறப் பொறுப்பு, குழந்தை வளர்ப்பு, வீட்டுவேலை— போன்றவைகளைப்பற்றி போதிப்பதற்காக ''இல்லறவகுப்பு''கள் ஏற்படுத்தப்பட்டன.

இதன் பயனுக அங்கு விவாகரத்துக்கள் ஓரளவு குறைந்துவருகின்றன.


(அ. கனகசூரியர்)

# உத்தமிகளின் உதாரணங்கள் உள்ளத்தைத் தொடவேண்டும்

பெண்களுக்கு அளிக்கப்படும் கல்வி எல்லா விடயங்களிலும் கண் திறப்பதாக இருக்கவேண்டும். நற்குணங்களின் இலக்கியங்களான பெண்மணிகளின் சரிதங்களை அடிக்கடி பெண் குழந்தைகளுக்குச் சொல்லித் தியாக வாழ்க்கையில் பற்றுண்டாகுமாறு செய்ய வேண்டும். சீதை, சாவித்திரி, தமயந்தி, லீலாவதி, மீராபாய் முதலிய உத்தமிகளின் உதாரணங்கள் எப்போதும் அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கச் செய்தல் அவசியம்.

-சுவாமி விவேகானந்தர்

## தையற் கலை



இப்பூச்சித்திரத்தைக் கவுணின் நெஞ்சுப்பகுதியில் அமைத்தால் அழகூட்டுமெனச் சொல்லவும்வேண்டுமா!

செல்வி. கோ. சிவஞானவதி

## தெய்வமே குழந்தை

ஆசையின்கருவூலம் என்று குழந்தைகளை பாராட்டுகிறோம். குழந்தையின் பிஞ்சு உள்ளம் கற்பனை மண்டலமாகும் அதனின்றும் எழும் கற்பனைகளைக் குழந்தையின் மழலைச்சொற்கள் வாயிலாகக் கேட்டு, ஆனந்தம்கொள்கிறோம். குழந்தை உலகமே வேறு. அங்கே கள்ளங்கபடமே சஞ்சரிக்க இடமில்லை. இத்துடன் கவலைக்கும் இடமில்லை. இந்தக் குழந்தை உலகத்தில் இன்பத்தை மட்டுமே பெறலாம். குழந்தைகள் செய்யும் குறும்பு ஒவ்வொன்றும் நமக்கு இன்பம் தரும் லீலைகளாகவேஇருக்கின்றன. குழந்தைகள், மெய்தீண்டல்உடற்கின்பம் என்றும் குழந்தையின் மழலைச்சொல் கேட்டல் செவிக்கின்பம் என்றும் திருவள்ளுவர் கூறியபடி குழந்தையின் ஸ்பரிசமும் பேச்சும் இனியன.

தமிழ் நாட்டிலேகுழந்தையைத் தெய்வமாகவும் தெய்வத்தைக் குழந்தையாகவும் துதிக்கும் வழக்கம் பண்டுதொட்டு இருந்துவருகிறது. முருகனும் கண்ணனும் குழந்தைத் தெய்வங்கள். மூன்று வயதில் ஞானப்பாலருந்தி பாடத்தொடங்கிய ஞானசம்பந்தக் குழந்தையை முருகனின் திருவவதாரம் என்று சொல்லுகின்றனர். அந்தத் தெய்வமே குழந்தெயெனப் போற்றப்படும் ஞானசம்பந்தனின் பதிகங்களைப் பாடிப் பரவசமடையாத சைவன் இல்லை. வாயிலே பாலொழுகக் குளக்கரையிலே நின்ற பிள்ளையைத் தந்தை கண்டு, ''யாருடைய பாலையடா குடித்தாய்?'' என்று உறுக்கும் காட்சி இல்லத்தில் ''தாய்ப்பாலைக்'' குடித்து பாலின்துளிகள்இதழ்க்கடையோரம் வழிய நிற்கும் நமது செவ்வாய்க் குழந்தைகளிலும் தெய்வத்தன்மை பொலிந்து இருக்கிறது என்பதை நினைவூட்டுகிறது. ஆகவே நம் நாட்டவர்தெய்வமே குழந்தை எனத் துதிப்பது பிழையாகாது.

—சி. காசிப்பிள்ளை

## தானியங்கும் தையல் இயந்திரம்

திரஸ்போல் என்னுமிடத்தில்இரண்டுஅபூர்வ தானியங்கும் தையல் இயந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒரு இயந்திரம் சட்டையின் கைப்பகுதிகளைத் தைக்கிறது. இதுகைகளைத் தைப்பதுடன் அதன் ஓரங்களையும் வெட்டுகிறது. இதனுல சட்டைஉற்பத்தி இரு மடங்காக அதிகரிக்கிறது மற்றொருயந்திரம், காற்சட்டைகளின்பெல்ட் வளையங்களைத் தைக்கிறது. இத[illegible]தையல்தொழிலா[illegible]களின் தொல்லை ஓரளவு நீங்குகிறது.

இந்த இயந்திரங்களை உருவாக்கியோருக்குதங்க வெள்ளி மெடல்கள் பரிசளிக்கப்பட்டுள்ளன. விரைவில் இவை ஏராளமாக உற்பத்தி செய்யப்படும்.

# சிந்தையைக் கவரும் ....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

(Press Board) உபயோகிக்கலாம். தாவரத்திலுள்ள நீர் வெளியேற்றப்பட்டு ஒற்றுத்தாளின் உறிஞ்சப்படும். தேவைக்கேற்றபடி ஒற்றுத்தாளை மாற்றலாம். சிறிது நாட்களின்பின் இதுகாய்ந்த பொருளாகிவிடும்.

காய்ந்தபின் பூவைஎடுத்து தடித்த தாளில் 16''X10'' என்ற அளவில் வெட்டி ''செலோரேப்''பினுல்ஒட்டலாம். ஒட்டியபின் சேகரித்த திகதியையும், சேகரிக்கப்பட்ட சுற்றுடலையும் அதன் கீழ் குறித்துவிடவும்.

பூக்களைச் சேகரிப்பது மட்டுமல்ல அவற்றைப்பற்றிய தகவல்களை அறிவதுதான் மிகமுக்கியம். சேகரிப்பவர் தன்னுடன்கூடவேஒருகுறிப்புப் புத்தகம்எடுத்துச்செல்ல வேண்டும். பூவின் நிறம், மணம், அதனுடைய மரத்தைப்பற்றிய விபரங்கள், மரம் வளர்ந்தசூழ்நிலை, சுற்றுக் கடற்கரையா, வயல்நிலமா? குளக்கரையா, மணற்பிரதேசமா?-போன்ற விபரங்கள், மரம் வளருகின்ற நிலத்தின் தன்மை போன்றவையுடன், பூ பூத்திருக்கும் மாதங்கள், அவற்றைத் தரிசிக்கும் வண்டினங்கள், வண்ணாத்திப்பூச்சிகளின் பெயர்கள் முதலிய விபரங்களையெல்லாம் சேகரிக்கலாம்.

இவற்றையெல்லாம் ஆராயப்புகின், நயவஞ்சகம் நிறைந்தஇம்மானிடஉலகைவிட்டு வேறொரு கந்தர்வ உலகில்சஞ்சரிக்கத்தொடங்கிவிடுவோம். வீண் அரட்டைத்திச்செயல்களுக்கு நேரமேயிருக்காது. மற்றவர்களே நம்மைப்பார்த்து வியக்கும்படியாகிவிடுவோம்.

மேற்கூறிய விபரங்கள் எல்லாவற்றையும்சேகரித்து தயார் செய்யப்பட்ட தாவரங்களுடன் இணைத்துவிடலாம். மேலதிகமாக பூக்களை வண்ணச் சித்திரமாகக் கீறியெ அத்துடன் வைக்கலாம் அதைவிடகாட்டுப்புஷ்பங்களை, அவற்றின் இயற்கைசூழ்நிலையிலே படம் பிடித்தால் ஒருதனிப்பொழுதுபோக்காகும். இவ்வாறு நமது ஆராய்ச்சி விரிந்து கொண்டேபோனுல், ஈற்றில் எமது சேகரிப்பைப் பார்த்து நாமே பூரிப்படையலாம் புதிதாக வரும் துணிகளையெல்லாம் வாங்கி, சட்டைதைப்பதைவிட இப்படி ஒரு பொழுதுபோக்கில் பலனுண்டு. சிலவேளைகளில் ஒருவருமே கண்டுபிடிக்காத, புது இனங்களைக் கண்டு பிடித்து, பெருமைக்குரிய விஞ்ஞானியாகவும்மாறிவிட முடியும். எனவே இச்சிறந்த பொழுதுபோக்கு, ஒரு பொழுதுபோக்குமட்டுமல்ல அரிய ஆராய்ச்சியுமாகும்.

## சிறுபொறியும்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)


களுடைய நாக்குகள், கைகளிலும் அதிகமாக வேலை செய்யும்.

ஆரம்பத்திற் பேச்சிலே தொடங்கி, நாளாக ஆகப் பக்கத்தில் இருக்கும் எதையும் ஆயுதமாகக் கொண்டு பாவித்தனர். பிள்ளைகளும் அவ்வாறே செய்யத் தலைப்பட்டனர். சிவபம் இருகுடும்பத்தினருக்கும் மிகவுங்கஷ்டமாகிக் கொண்டுவந்தது.

ஐவனும் கேபிரியலும் சட்டத்தை நாடி நாடி அலுத்துப் போய்விட்டனர். இருவருக்கும் குற்றப்பணங் கொடுக்காவிட்டால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது. இதனுல் அவர்களுடைய கோபம் மென்மேலும் வளர்ந்து, நாய்களின் நீண்ட சண்டைகளில் ஏற்படுங்குரூரமும் அதிகரித்தது. ஆறு வருஷங்களாகச் சண்டைகள் வளர்ந்து கொண்டேபோயின. ஐவனுடைய தகப்பன் ஒற்றுமையாக இருக்கும்படி பன்முறை கூறியும் அவர்கள் கவனிக்கவே இல்லை.

ஏழாவது வருஷத்தில் ஒரு விவாக வீட்டில், கேபிரியல் ஒரு குதிரையைக்களவெடுத்ததாகஐவனுடையமருமகள் சொன்னுள். குடிபோதையில் இருந்த கேபிரியல் கோபத்தைஅடக்கமுடியாதவனுக இருந்தான். அவன் அந்தப் பெண்ணுக்குஅடித்த அடியில், அவள் ஒருகிழமை படுக்கையில் இருக்கவேண்டி நேர்ந்தது.

(தொடரும்)


ST.ANTHONY'S HARDWARE STORES LTD.

516, SKINNERS ROAD SOUTH, COLOMBO 10,

சென்ற். அந்தோனிஸ் குறாப்

516, ஸ்கினேஸ் வீதி, தெற்கு,
கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியமும் ஈழமும்

தமிழ்மொழியானது வடமொழியைப் போன்று பழமையானதுடன் இலக்கிய வளத்தில் வடமொழியுடன் தோளோடுதோளாக இணைந்துமுள்ளது. தமிழகத்திலே சங்ககாலத்திலும் பொற்காலப்பிரிவில் பலபுலவர்கள் வாழ்ந்தனர். அவர்களால் இயற்றப்பட்ட நூல்களே சங்க இலக்கியங்கள் என்று கூறப்படுகின்றன. உயர்புலப் பாடல்கள் பத்தினையும், பலபாடல் திரட்டுகள் எட்டினையும் அடக்கிய நாசபத்துப்பாட்டு, எட்டுத்தொகையென்பவற்றை அது கொண்டுள்ளது. மறைந்திருந்த, பெறுமதி வாய்ந்த செல்வங்களாகிய இவற்றைக் காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய கலாநிதி உ. வே. சாமிநாதையர் அவர்கள் வெளிக்கொணர்ந்ததுடன் அவற்றில் பெரும்பான்மையானவற்றைப் பதிப்பித்து முகவுரையுடனும், விளக்கக் குறிப்புகளுடனும் வெளியிட்டார். அவரின் காலடியிலிருந்து தமிழைப் படிப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு வாய்த்த மையையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். அவரையும், பழந்தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணியினையும் சிலர் அறிந்திருக்கலாம்.

## ஈழத்துப் பூதன்தேவன்

சங்கப் பாடல்களில் ஈழத்துப் பூதன்தேவன் என்னும் ஒரு புலவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் இயற்றியனவான எட்டுப் பாடல்கள் இப்போது உள்ளன. இலங்கையிலிருந்து சென்ற அவர் பாண்டிய மன்னனின் அவையிலே பெரும் புகழினைப் பெற்ருர். அவர் மதுரையில் வசித்ததன் காரணத்தால் மதுரை ஈழத்துப் பூதன்தேவன் என அழைக்கப்பட்டார். அவரது பெயரின் மூலம், அவரது இறைப்பெயர் தேவன் என்பதும், அவரின் தந்தையார் பெயர் பூதன் என்பதும், அவர் இலங்கையிலிருந்து சென்று மதுரையில் வாழ்ந்தார் என்பதும் அறியப்படுகிறது.

## சிலப்பதிகாரம்

தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருன சிலப்பதிகாரம் சங்க இலக்கியங்கள் எழுந்ததற்குப்பிற்பட்ட அடுத்த காலத்தில் எழுந்த இலக்கியமாகும். கண்ணகியின் பெருமை அதில் கூறப்படுகிறது. சேர மன்னனுகிய செங்குட்டுவன் தனது தலைநகராகிய வஞ்சியில் கண்ணகிக்குஓர் ஆலயத்தினை எழுப்பினன். கண்ணகியை வழிபடும் பொருட்டு இலங்கை மன்னனுகிய கஜபாகு அங்கு சென்ருன். அவ்வாலயத்தில் தெய்வமாகக் கண்ணகி வழிபடப்பட்டாள். இலங்கையிலே கண்ணகியை வழிபடுவதற்காக ஒரு ஆலயத்தை அமைப்பதற்கான அனுமதியைத் தரும்படி கண்ணகியை வழிபட்ட கஜபாகு கண்ணகியின் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக்கொண்டான். இலங்கைதிரும்பிய கஜபாகு கற்பின் தெய்வமாம் கண்ணகிக்கு ஓர் ஆலயத்தினை எழுப்பினன்.

தமிழ் நாட்டிலே கண்ணகிக்குரிய கோவிலோ அன்றேல் கண்ணகித் தெய்வத்தை வழிபடுவதற்கான நடைமுறைகளோ இல்லாத ஒரு நிலையில் இலங்கையிலே கண்ணகிக்குப் பல ஆலயங்கள் இருப்பதுடன் இந்துக்களும், பௌத்தரும் ஒரே முறையாகக் கண்ணகி விழாவைக் கொண்டாடி வருவது வியப்பைத் தருகின்றது. இது நமது மனதுக்கு இனிமையைத் தருகின்றது.

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள், கண்ணகிக்குக் கோவில் எழுப்பிய சேரமன்னன் செங்குட்டுவனின் இளைய சகோதரனுவார். செங்கையிலுல் அமைக்கப்பட்ட அந்த ஆலயம் காலத்தின் கொடுமையினுல் அழிக்கப்பட்டதுடன் அதனது ஒரு அங்குலப் பகுதியாவது தற்போது கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளது. ஆனுல் அதே வேலையில் புலவனுல் பாடலினுல் கட்டப்பட்ட கோவிலோ எக்காலமும் நிலைக்கும்படியாக காலத்தினை வென்று மேலோங்கி நிற்கின்றது.

## மணிமேகலை

இளங்கோவின் நண்பராகக் கூறப்படும் சாத்தன், முன்னே கூறப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களில் மற்றெரு காவியமாகிய மணிமேகலையை இயற்றிய ஒரு பெரும்புலவராவர். மாதவி மூலமாகக் கோவலனுக்குப் பிறந்த மகளாகிய மணிமேகலையே இக்காவியத்தின் கதாநாயகியாவள். அரசவைப் பெருமாட்டியாகிய மாதவி கண்ணகியின் கணவனுகிய கோவலனைக் காதலித்து அவனுடன் நீண்டகாலம் வாழ்ந்தாள். துறவு கொண்டு பிக்குணியான மணிமேகலை பல இடங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டாள். இலங்கைக்கும் வருகைதந்துமணிபல்லவத்திற்குச் சென்று அமுதசுரபி என்னும் பாத்திரத்தைப் பெற்று குறையாத உணவைத் தானஞ்செய்தாள். அப்பாத்திரம் வெறுமையானதே இல்லை. காவியத்திலே எவ்வளவு தூரம் வரலாற்றுக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ள தென்பது ஆராயப்பட வேண்டிய தொன்ருகும். எனினும், கலாச்சாரத்துறையில் இலங்கையினையும் தமிழ்நாட்டினையும் இணைக்கும். புலவனின் கற்பனையை அது காட்டுகின்றது. மணிமேகலை ஒரு பௌத்த நூலாகையால் அது மூன்று அரும்பொருள்களாகிய புத்த, தர்ம, சங்க என்பவற்றைப் பற்றிக் கூறுகின்றது. எனது குருவினுல் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது. இலங்கையைச்சேர்ந்த வணக்கத்திற்குரிய சமன்கல என்பவர் அனுப்பிய குறிப்புக்களினுல் தெளிவு பெற்ற அவர் தனது முன்னுரையில் தனது நன்றியைத்தெரிவித்துள்ளார்.

## இலங்கைப்பதிகங்கள்

தேவாரங்கள் எனப்படும் பத்திப்பாடல்களில் இலங்கையிலுள்ள திருக்கோணமலை, திருக்கேதீஸ்வரம் என்னும் தலத்தெய்வங்களைப் பரவும் பாடல்களை நாம் காணலாம். நாயன்மார்களுக்குப் பின் வந்த அருணகிரிநாதர் முருகக் கடவுள் மீதுகொண்ட பக்தி ஒப்பற்றதாகும். இலங்கையரால் கதரகம தெய்யோ எனப்படும் கதிர்காமத்து இறைவனைப் போற்றி இவர் பாடியுள்ளார். தமிழில் கதிர்காமத்தெய்வம் என்றும் சிங்களத்தில் கதரகம தெய்யோ என்றும் கூறப்படுவதும் சிறுவேறுபாட்டைக்கொண்ட ஒரேவித ஒலியாகும். கதரகம தெய்யோ தற்பொழுது இந்துக்களாலும் பௌத்தர்களாலும் பரவப்படுகிறது.

## ஈழத்தார் தமிழ்த்தொண்டு

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டிலிருந்து லங்கைக்கு வந்து தமது திறமையை வெளிக்காட்டி இங்கிருந்த அரசர்களிடம் பரிசில் பெற்றுத் தாய் நாடு திரும்பும் பல புலவர்களைப் பார்க்க முடிகிறது. இலங்கையிலிருந்து இந்தியா சென்றவர்களுள் ஞானப்பிரகாசர்குறிப்பிடற்குரியர். சைவமதத்துறவியாகிய அவர் இந்தியா சென்று திருவண்ணுமலை ஆதீனத்தில் சேர்ந்துதொண்டுசெய்தார். சைவசித்தாந்தத்தை விளக்கும்வகையில் சிவஞானசித்தியாருக்குதிறமையான விளக்கவுரையினை எழுதினுர். சென்ற நூற்ருண்டின்போது பலஅறிஞர்கள் இந்தியாவிற்குச் சென்று பெயரைநிலைநாட்டி பெருமை தேடிக்கொண்டனர். இவர்களுள் ஆறுமுகநாவலர் முதலிடம் பெறுகின்ருர்.

தமிழ் நாட்டிலே அவர் சைவ சித்தாந்தத்தைப்போதித்துப்பரப்பியதுடன்பெறுமதிவாய்ந்த இலக்கிய மத சம்பந்தமான புத்தகங்களைப் பிரசுரித்தார். இதனைப்போலவே இந்திய அரசாங்கத்தில் உயர் பதவி வகித்த சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பல இலக்கியங்களை அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார்.

இவ்வாருக நீண்ட காலமாக இரு நாடுகளுக்குமிடையில் நிலையான தொடர்பு இருந்து வந்துள்ளது. இந்தியா [illegible] புத்தகபவனின் பெருமையை இந்திய மக்கள் உணரத் தொடங்கியதுடன் பௌத்த மதம், தத்துவம் ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகளிலும் அறிஞர்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

## புதுமை இலக்கியம்

மிகப் பழமையானதும் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கக் கூடியதுமான ஒரு மொழியே தமிழ் மொழியாகும். எண்ணிறந்தபழமையான இலக்கியச் செல்வத்தையுடைய இம்மொழியில் தேசிய சுதந்திர அலைகளுல் வன்மையூட்டப்பெற்ற புதுமை எழுத்தாளர்களின் படைப்புகள் புதுமை இலக்கியமாகவளர்ச்சிபெற்றுவருகிறது. இவ்வளர்ச்சியில் ஈழத்தமிழரும் பின் தங்கிவிடாமல் அன்றுபோல் இன்றும் பணி ஆற்றிவருகின்றனர்.

— கி. வா. ஜகந்நாதன் —

# உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[6-9-66 — 12-9-66]

### மேட இராசி

செய்தொழில் பலன் தாரமை, மனவெறுப்பு, அலைச்சல், ரோகபீடை, ஆரோக்கிய க்கேடு, பணமுடை, நண்பர் உதவி, பிற இடங்களில் மதிப்பு மரியாதை பெறுதல், குடும்ப சுகக் குறைவு.

### இடப இராசி

கமத்தொழில் மேன்மை, பூமிப்பலிதம், குடும்பசுகம், செய்தொழில் சிறப்பு, வீண் வம்பு வழக்குகளேற்படல், நினைத்தவை நிறைவுறல், ரோக பயம், வீண்செலவு.

### மிதுன இராசி

செய்காரியச் சிறப்பு, அதிகார மேன்மை, வாக்கினுல் விபரீத பலன்கள் நடத்தல், இனபந்துக்களால் மனச்சஞ்சலம், பகைவரால்தொல்லை, குடும்பத்தில் சுகம், பொருள் வரவு.

### கடக இராசி

உடல்நலக்குறைவு, கண்களில் பீடை, செய்தொழில் நட்டம், வீண் அபவாதம் கேட்டல், அவமானச் செய்கை, மனமடிவு, குடும்பத்தில் அமைதி நிலை.

### சிங்க இராசி

ரோகபயம், வீண்செலவு, அலைச்சலால் பலவித கஷ்டங்களுமேற்படல், புத்திக்குறைவு, பாடுபடற்கேற்ற பலன் இடையாமை, தொழிற்குறைவு, சில இடங்களில் ஏமாற்றம்.

### கன்னி இராசி

தொழிற் சிறப்பு, அதிகார மேன்மை, வாத்தைச்சிறப்பு, நல்லோர் நட்பு, குடும்பத்தில் சந்தோஷம், நண்பர் உதவி, வீண்பழிகேட்டல், பெண்களால் அவமானம்.

### துலா இராசி

பூமிப்பலிதம், செய்தொழில் நன்மை, தனதானிய லாபம், புத்திரராக்கஷ்டம், வீண் அவமானப்படல், வாக்கினுல் நன்மை, நிலைப் பிரிவு, அலைச்சல்.

### விருச்சிக இராசி

செய் தொழிற் சிறப்பு, குடும்ப நலம், தாரபுத்திர சுகக்குறைவு, செய்காரிய மேன்மை, மனத்தில் அமைதியின்மை, தேகநலிவு, பொருள் வீண்விரயம், தெய்வ வழிபாடு.

### தனு இராசி

இனபந்துக்கள் பகை, ஆயுத ரோகபயம், சத்துரு தொல்லைஅதிகரித்தல், வீண் அபவாதம், பாடுபடற்கேற்ப பலன்கிடையாமை, கொடுக்கல் வாங்கல்தொல்லை, குடும்பசுகமின்மை.

### மகர இராசி

நண்பர் தொல்லை, பண நட்டம், ரோகபயம், பெண்களால் தொல்லைகள், உடல் நலிவு, புத்திச் சிறப்பு, பிரயாண அலைச்சல், நம்பிஏமாற்றம், குடும்ப சுகமின்மை.

### கும்ப இராசி

பணமுடை, செய்தொழில் தடைப்படல், இனபந்துக்களால் தொல்லைகள், பாடுபடுதற்குப் பலன் இன்மை, உடல் ரோகம், பூமிலாபம், அலைச்சல்.

### மீன இராசி

தாரபுத்திர சுகமின்மை, செய்தொழில் அபிவிருத்தி, புதிய பதவி அந்தஸ்து, குடும்பத்தில் அமைதி குறைதல், இனசனத் தொடர்பு அதிகரிப்பு, பொருள்வரவு, காரியச்சிறப்பு.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

டன், மற்றும் வெற்றிலை, பாக்கு, கர்ப்பூரம் ஆதியனவும் கொண்டுபோய் வழிபடவேண்டும்' என்று கூறப்பெற்றுள்ளது. நீ அவ்வாறு சென்று உள்ளன்போடு வணங்கினுல் உனது குறைகளெல்லாம் நீங்கிவிடும். கோடி கோடியாக உன்னைப் பீடித்த வினைகளெல்லாம் பறந்தோடிவிடும்.

உனது மனைவியைப் பற்றியோ, உனது புத்திரர்களைப் பற்றியோ இடமிடந்தோறும் நின்று கலங்காதே. அஃதெல்லாம் அவன் பொறுப்பில் விடு. அஃதெல்லாம் எப்பவோ முடிந்தகாரியம் இப்பொறுப்புக்களை வீணே சுமக்காதே என்று கூறப்பெற்றுள்ளது.

சுவாமியவர்கள், கந்தனின் கோயில் வீதியின் சிறப்பையே எவ்வாறு பாடுகின்ருர் என்பதையும் பார்க்கலாம்

இராகம்—பிலஹரி தாளம்—ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினுல்
இடர்கள் எல்லாம் போமே.

அநுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவஞ் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த வுண்டு


சரணம்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனுலென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினுலென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே.
சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியம் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்து பார்த்தால் முத்தி நிச்சயமே.

இவ்வாறு மேலும் பல பாடல்களை சுவாமி அவர்கள் பாடியுள்ளார்கள். ஆகவே நாம் செல்ல வேண்டிய முறையாக நல்லூர் முருகன் கோவிலுக்குச் சென்று, அம்முருகனை வாயார மனதாரப்பாடி, புகழ்ந்து, அவனருள் பெற்று உய்வோமாக. வணக்கம்.

'யோகமகான் திருவடி வாழ்க'


கார், லொறி, றெக்டர், லோஞ், தண்ணீர் பம்
முதலியவற்றிற்கு
றீபோரிங், றீசிலிவிங்,
வால்(f) சீற் அடித்தல்,
வால்(f) சீற் வெட்டுதல்,
வால்(f) பேஸ் பண்ணுதல்
முதலியவற்றிற்கும்
கார், லொறி, றெக்டர்
ஆகியவைகளுக்கு
விசேஷ யந்திரங்கள் மூலம்
பிறேக் றம், பிறேக் லைன்,
இனச் அசெஸ்மெண்ட்
செய்வதற்கும்
மற்றும்
சகல விதமான
கடைச்சல்–புரி வெட்டுதல்
போன்ற வேலைகளுக்கும்
எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்!




நோத் எண்ட் மோட்டார் வேக்ஸ்
(ஓட்டோமோபயில் என்ஜினியர்ஸ்)
291, ஸ்றான்லி றேட், — யாழ்ப்பாணம்.
(அ. சி. விஷ்ணுசுந்தரம் கட்டிடம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வைத்தியம்

தொய்வு, சுசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்ற லோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பசுபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

**காணி**

பருத்தித்துறையில் 4 பரப்பு வீடு கட்டக்கூடிய காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. ஹாட்லிக் கல்லூரிக்கு அண்மையில் உள்ளது. விபரங்களுக்கு திருமதி சின்னையா உபதபாற்கந்தோர், துன்னாலை. 1228

**ரேப்றெக்கோடரும் றேடியோகிறாமும்**

பெலி ரூறக்ஸ் ரேப்றெக்கோடர், (Belle 2 Tracks) H. M. V. றேடியோகிறாம் (H. M. V. Radio Gram) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- ஜெயந்தி றேடியோவேக்ஸ், 44, கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். 1217

**காணி**

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி செல்லும் றோட்டில் 8-ம் கட்டையடியில், நுணாவிலில் சக்கடத்தார் வளவு 57 பரப்பு தென்னை, மா, பனை பிரயோசனம். வருட வருமானம் ரூ 300/- விபரங்களுக்கு ரி. ராசரத்தினம், 1700, Colla Road, Rajagiriya. 1237

## கல்வி

மாணவ ஆசிரியர், சுகாதார பயிலுனர், சிருப்பர் மற்றும் பல பரீட்சைகளுக்கான முழுநேர வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1215

**வகுப்புகள்**

க. பொ. த. பரீட்சை மார்கழி 1966. விஞ்ஞானம், கலை, வணிகம், ஆங்கிலம், தமிழ்ப்பிரிவுகளுக்கு, பழைய விளுக்களுக்கும் மாதிரிவிளுக்களுக்கும் விடை அளிக்கும் வகுப்புகள் நடாத்தப்படும். சேர்வோர் 15-9-66க்கு முன் விண்ணப்பிக்கவும். வர்த்தக கலாசாலை, 230, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1238

## தேவை

**டசல்ஸ் கட்டுபவர்கள்**

சாறிகளுக்கு (டசல்ஸ்) குஞ்சம் இணைக்க அனுபவமுள்ள பெண்கள் தேவை. இம்மாதம் 9-ம் திகதிக்கு முன் நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 149, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 1239

**டிராக்டர் சாரதிகள்**

டிராக்டர் சாரதிகள் தேவை. இவர்களுக்கு, அவர்கள் செய்யும் வேலை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். மனுச் செய்க: திரு. கே. சண்முகம், இல: 135, மீதோட்டமுல்லை வீதி, வெல்லம்பிட்டியா. 1240

**பணிப்பெண்**

பிள்ளையை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. நேரில் வரவும். 39, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் 1227

**பங்காளர்கள்:**

ஸ்தாபனமொன்றுக்குப்பங்காளர் தேவை. பங்கொன்று 25/-. 4 பங்குகளுக்கு மேல் ஒருவர் பெற முடியாது. விபரங்களுக்கு முத்திரையும் முகவரியும் அனுப்பி அறியவும். காரியதரிசி, வாணர் கேப்ஸ் மெடிக்கல் இன்டஸ்றீஸ் அன் கோ, 51, ஈச்சமோட்டைவீதி, யாழ்ப்பாணம். 1232

**தொழிலாளர்கள்:**

மூடைகள் தயாரித்து புகைவண்டியிலும் லொறியிலும் ஏற்றுவதற்கு அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. கூடிய வேதனம் வழங்கப்படும். நேரில் வருக. டாக்டர் அம்பலவாணர். 51, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 1233

**இடமாற்றம்**

யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு மிக அண்மையில் உள்ள பாடசாலையில் படிப்பிக்கும் ஓர் ஆசிரியர் வெளிமாகாணங்களில் பட்டினத்தைச் சமீபமாக உள்ள பாடசாலைக்கு இடமாற்றம் தேவை. விரும்பினோர் K. S. சம்பந்தர். No: 90, கொழும்புத்துறை வீதி' கொழும்புத்துறை என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 1242

## வானொலி மசோதா

கொழும்பு, திங்கள்

ஒலிபரப்புக் கார்ப்பரேஷன் நகல் மசோதாவை பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அங்கீகரித்துள்ளார்.

## முத்தமிழ்விழா

யாழ்ப்பாணம், சனி

கலைச்சுடர் நாடகமன்ற ஆதரவில் கொடிகாமத்தில் இம்மாதம் 28-ம் தேதி முத்தமிழ்விழா நடைபெறவிருக்கிறது. கொடிகாமம் அரசினர் பாடசாலையில் நடைபெறும் இவ்விழாவில் பல கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.


காணத்தவறாதீர்கள்!!


வட்டுக்கோட்டை

யாழ்ப்பாணக் கல்லூரியில்

6-9-66 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு

(மாணவர்க்கு 7-9-66 மாலை 7 மணிக்கு)

யாழ்ப்பாணத்தில் தயாராகிய முதல் முழுநீள 16மி. மீ. தமிழ்ப்படம்



பாசநிலா

ரிக்கட்: ரூ. 3-00, 2-00

(7-9-66 மாணவர் காட்சிக்கு ரூ. 1-00)


# "ஒன்றரை லட்சம் கடன் நீங்கியது"

## சாவகச்சேரி நகரசபைத் தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

நான் பதவியேற்ற சமயம் சபைக்கு இருந்த நான்கு இலட்சம் ரூபா கடனில் ஒன்றரை லட்சம் ரூபாவைக் கட்டிவிட்டேன். அத்துடன் வட்டாரங்கள் தோறும் பல முன்னேற்ற வேலைகள் செய்யப்பட்டுள்ளன' என்று சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. ஆர். டி. சிவகுரு தெரிவித்தார்.

தற்போது பரிசோதனை நடைபெற்று வருவதாகவும் இப் பரிசோதனை விரைவில் முடிந்துவிடும் என்று கூறிய தலைவர், டிசம்பர் மாதத்தில் நடைபெற விருக்கும் நகரசபைத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி தற்பொழுது ஒன்றும் கூறுவதற்கில்லையென்று தெரிவித்தார்.

### பஸ் நிலையம்

சாவகச்சேரிக்கு ஒரு நவீன பஸ்நிலையம் தேவையென்று பலர் கூறியுள்ளார்கள். நகரசபை பொறுப்பில், பஸ் நிலையம் அமைக்கப்படவில்லை' காரணம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலை இங்கும் ஏற்படலாம். நகரசபைத் தலைவர் மாறும் போது, பஸ் நிலையமும் மாறிவிடக்கூடும் இதனால் பொதுமக்கள் பணம்தான் வீணாக விரயமாகும். ஆதலால் இலங்கை போக்குவரத்துச் சபையே பஸ் நிலையத்தை பொறுப்பேற்றுக் கட்டினால் நல்லது

### வாடிவீடு

வாடிவீட்டில் பல முன்னேற்றங்கள் செய்யப்பட வேண்டும். அதற்கு போதிய பணம் வேண்டும். வாடிவீட்டின் அபிவிருத்திக்காக, அரசாங்கம் உதவியளிப்பதாக உறுதியளித்துள்ளது. அரசாங்க நன்கொடை கிடைத்ததும் வாடிவீட்டில் பல முன்னேற்றங்கள் செய்யப்படும்.

### பொது வேலைகள்

வட்டாரங்கள் தோறும் பல முன்னேற்ற வேலைகள் செய்யப்பட்டுள்ளன. சாவகச்சேரி கண்ணடிப்பிட்டிச் சுடலையிலும், நுணாவில் காத்தரளம்பிட்டி சுடலையிலும் மடங்கள் கட்டப்பட்டுள்ளன. எந்த வட்டாரத்துக்கும் பாரபட்சம் காட்டாமல் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மக்கள் நலனில் அக்கறை கொண்டு, நகரத்திற்குத் தேவையான முன்னேற்ற வேலைகளை அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் செய்துவருகின்றேன்.

## வாசிகசாலையில் மந்திகள்

உடுப்பிட்டி, செவ்

கிளிநொச்சி, கனகபுரம் இளம் விவசாயிகள் கழகத்தினரின் வாசிகசாலை தற்பொழுது மந்திகளால் பாதிக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது. தினமும் இவ்வாசிகசாலைக்குப் பத்திரிகைகள் படுக்கப்பட்டு வருவதாகவும், கழக அங்கத்தவர்கள் பத்திரிகைகள் படிப்பதில் அதிக அக்கறை கொள்வதில்லையென்றும், இதனால் வெறிச்சோடியிருக்கும் வாசிகசாலையில் மந்திகள் கூடிக் கும்மாளமடிப்பதாகவும் இளம் விவசாயி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## சாராயவேட்டை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் மேற்குப் பகுதியில் சட்டவிரோதமாக சாராயம் வைத்திருந்த [illegible] பொலிசார் நேற்றிரவு கைது செய்தனர். சாராய [illegible] தொடர்ந்து நடைபெறுகின்றது.




## கொழும்பு

செவ்வாய் 6-9-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 தமிழோடிசைபாடல், 8-00 தோத்திரப்பாடல்கள், 8-15 ஞானமிர்தம்.

**344 மீட்டர் & 49 மீட்டர்**

8-30 முத்திநெறி, 9-00 முஸ்லிம் சமயப் பாடசாலை, 9-30 தேர்ந்தஇசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 இசைமெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 7-15 பேச்சு, 7-30 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதசுரம். 10-00 நேயர்விருப்பம்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்

பெரியகடைபிலுள்ள 86ஏ இலக்கச் சந்தைக்கடை கேள்விப்பத்திர மூலம் 15-9-66 தொடக்கம் 31-12-69 வரை குத்தகைக்குக் கொடுக்கப்படவிருக்கிறது. கேள்விகள் பெற்றுக் கொள்ளப்படும்கடைசிநாள் 10-9-66-ம் திகதி பி. ப. 3 மணியாகும். இதுபற்றிய ஏனைய விபரங்களை மாநகரசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

கட்சன் செல்வராசா
மாநகரசபை ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
1—9—66. 958


**மகாத்மா தியேட்டர்**

(நெல்லியடி)

தினசரி 6-30—9-30

Winners of the West

(Full Serial)

(சீரியல்)

**REGAL—JAFFNA**

NOW SHOWING

DAVID NIVEN

in

Where The Spies Are

(Panavision-color)

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

போயா தினங்களில் 4 காட்சிகள்

சிவாஜி - பானுமதி

நடித்த

அ[illegible]ளி

**நியூ காலிங்கன்**

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

சிவாஜி கணேசன் - பத்மினி

நடித்த

எதிர்பாராதது

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

விஜிதா (ஹட்டன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

மொடேர்ன் (பண்டாரவலை)



சிவாஜி - எஸ்.எஸ்.ஆர்.

பாலையா, ராதா, முத்துராமன், ஸ்ரீராம், நாகேஷ், தேவிகா, புஷ்பலதா

மற்றும் பலர்நடிக்கும்

பாரத மாதா பிக்சர்ஸ்

பழநி

இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி

திரைக்கதை - டைரக்ஷன்: பீம்சிங்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ரி எம சௌந்தரராஜன்- பி எஸ் சரோஜா நடித்த

அருணகிரிநாதர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளை கிடைக்கவில்லையே!

## இளமங்கை மனமுடைந்து தற்கொலை

மாவிட்டபுரம், திங்கள் கட்டுவலைச் சேர்ந்த செல்லாச்சி என்ற 30 வயதுப் பெண் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது.

செல்லாச்சி எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவர். அவருக்கு ஆறு, ஏழு கலியாணங்கள் பேசப்பட்டன. ஆனால் அவை எல்லாம் தோட்டக்காரர், வியாபாரிகளாகவே இருந்தபடியால் அவர் அதை விரும்பவில்லை. அவர் உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளையையே 'விரும்பி இருந்தார்.

கல்யாணப் பேச்சுக்கள் தனது நோக்கத்தை நிறைவேற்றப் பயனற்றுப் போய்விட்டதைக் கண்டு மனமுடைந்த செல்லாச்சி, நச்சுத்திராவகம் அருந்தித் தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

இவ்விபரங்கள், நேற்று தெல்லிப்பழை மரணவிசாரணை அதிகாரி திரு. என். சுந்தரமூர்த்தி மரணவிசாரணை நடத்தியபோது வெளியாகின.

காலஞ்சென்றவரின் தந்தையான வல்லிபுரம் செல்லத்துரை, தாயார் சின்னப்பிள்ளை, சகோதரன் திருநாவுக்கரசு மற்றும் டாக்டர் வி. சண்முகநாதன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணையின் இறுதியில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள்

### ஏலத்தில் விடப்பட்டன

யாழ்ப்பாணம், செவ் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோட்டில் நேற்றுமுன்தினம் மாலை ஏராளமான பொருள்கள் ஏலம்போடப்பட்டன.

மாஜிஸ்திரேட்கோர்ட் பிரதமலிகிதர் திரு, ரி. சுப்பிரமணியம் இப் பொருள்களை ஏலம் போட்டார்.

சைக்கிள்கள், மண்வெட்டி, குட்கேஸ், ருத்தல்படிகள், சிமெந்துப் பக்கெட்டுகள், டோர்ச்லைட்டுகள் ஆகியவை ஏலத்தில்விடப்பட்ட பொருளில் அடங்கியிருந்தன.

இப்பொருள்களை வாங்குவதற்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்

பல வழக்குகளில் பொலிசாரால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் இவை.


### விற்பனைக்கு

கூப்பன் பதிவு புத்தகம்

அரிசிப்பங்கீட்டுப்புத்தகங்கள் வாரந்தோறும் பதியக்கூடிய இடாப்பு விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு மிக வசதியானது. இப்போது கிடைக்கும். ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

1241


## தடுப்பு நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் கைது செய்கின்றனர் என்றும் மற்றவர்கள் காடுகளில் மறைந்திருந்து சில தினங்களின் பின்னர் நாட்டுக்குள் பிரவேசித்துவிடுகின்றனர் என்றும் இந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதற்குக் காரணம் இராணுவ ரோந்து படையினருக்கு போதுமான படகுகள் இல்லாதிருப்பதே என்று கூறப்படுகிறது.

### 225 பேர் கைது

இவ்வருட முதல் ஆறு மாதங்களில் மட்டும் காங்கேசன்துறையில் 225 சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 14 பேர் மட்டுமே இராணுவ ரோந்து படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கரையோர ரோந்துப் படையினர் ஒரு பகுதியில் செல்லும் பொழுது மறுபுறமாக சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் படகுகளில் இறக்கப்படுவதாக பொலிஸ் இராணுவ அறிக்கை குறிப்பிடுகிறது.

இதுபற்றி பாதுகாப்பு அமைச்சைச்சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில், கரையோரப்பகுதியிலுள்ள ரோந்து படையினருக்கு போதுமான படகுகள் விரைவில் வழங்கப்படவிருக்கின்றதென்றும் பிரிட்டனிலிருந்தும் விரைவில் ஏழு ரோந்துப்படகுகள் வந்து சேரவிருக்கிறதென்றும் கூறினார்.

சட்டவிரோத குடியேற்றத்தடுப்பு நடவடிக்கைகள் வடபகுதியில் விரைவில் தீவிரப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சத்தியாக்கிரகம்

யாழ்ப்பாணம், திங்கள் சிறுபான்மைத் தமிழர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் முதலில் மாவிட்டபுரத்தில் ஆரம்பமாகுமென்றும், அதனைத்தொடர்ந்து உடுப்பிட்டியில் நடைபெறுமென்றும்சிறுபான்மை தமிழர் மகாசபையைச் சேர்ந்தஅங்கத்தவர் ஒருவர் கூறினார்.

சத்தியாக்கிரகத்திலீடுபடுவதற்காக தொகுதிவாரியாக இருநூறு தொண்டர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் என்றும், இம்மாதம் 18-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், சத்தியாக்கிரகத்திற்கான திட்டங்களும், திகதியும் வெளியிடப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வரண்ட வடபகுதி . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டபிள்யு. தகநாயக்கா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். புத்தளம் நகர அபிவிருத்திச்சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட நெசவு சாலையைத்திறந்து வைத்த அமைச்சர் தகநாயக்கா, பேசினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது!

### பிரதமரின் லட்சியம்

''இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும், அவர் சிங்களவராகவோ தமிழராகவோ இஸ்லாமியராகவோ பறங்கியராகவோ இருந்தாலும் சரி, அவர்கள் எந்த விதமான இடர்பாட்டுக்கும் வேற்றுமைக்கும் ஆளாகாமல் எல்லாவித உரிமையும் பெற்று இந்தநாட்டின் உரிமையுள்ள மக்களாகவாழ வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தைக் கொண்டவர் எங்கள் பிரதமர்.

### மாபெரும் சாதனை

தேசிய அரசாங்கம் இதுவரை சாதித்தது என்ன என்று கேட்கிறார்கள்! பிளவுபட்டிருந்த இலங்கையர் சமுதாயத்தை ஒன்றுபடுத்தி நாட்டில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தியது ஒன்றே நமது மாபெரும் சாதனை இல்லையா என்று வகுப்புவாத எதிர்க்கட்சிகளை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி டி. சில்வா பேசுகையில் கூறியதாவது ''பாலைவனத்தைச்சோலைவனமாக்குவோம் பாலும் தேனும் ஓடவைப்போம்'' என்றுகூறினால் அது வெறும் ஆசைவார்த்தை என்றேகருதப்பட்டது ஆனால் இன்று பாலைவனத்தை நாம் சோலைவனமாக்கிக்கொண்டிருக்கிறோம். இன்று காலை நான் இப்பகுதியில் தோண்டப்பெற்ற இலங்கையின் முதலாவது குழாய்க்கிணற்றைப் பார்வையிட்டேன், கிட்டத்தட்ட 600 அடி ஆழத்திலிருந்து குழாய்மூலம் தண்ணீர் பொங்கிஎழுந்து மேல்பாய்வதைக்கண்டபோது பாலைவனங்களை சோலை வனமாக்குவது கனவல்ல, நிச்சயம் அது நன்வாகும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

பதினொரு குழாய்க்கிணறுகளைத் தோண்டத்திட்டமிட்டிருக்கிறோம். இதன் மூலம் கிட்டத்தட்ட 30,000 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யமுடியும். இதே குழாய்குணறு திட்டத்தை புத்தளப்பகுதிக்கு மட்டுமல்ல. வரண்ட வடபகுதியிலும், குறிப்பாக மன்னார், வவனியா, கிளிநொச்சி போன்ற இடங்களுக்கும் விஸ்தரித்து சோலைவனமாக்கத்திட்டமிட்டுள்ளோம். இவ்விஸ்தரிப்பின் மூலம் வரண்ட நிலங்களை விவசாய விளை நிலமாக்கி, நமது சுய தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளமுடியும்.

உதவி உணவுவிவசாய அமைச்சர்திரு. பி. சி. இம்புலான பேசுகையில், ''மகாவம்சகாலந்தொட்டு, இந்நாட்டில்வாழ்ந்துவரும் சகல இன, மதமக்களையும், கொடுமையான வகுப்புவாதத்தால் பிரித்து இந்நாட்டில் மீள இனப்போராட்டத்தை ஏற்படுத்தி நாட்டை அழிவு பாதையில் கூட்டிச்செல்ல முயற்சிக்கும் எதிர்கட்சிகளுக்கு, யானைபோன்ற உறுதியான எங்கள்பிரதமர் சிறிதும் விட்டுக்கொடுக்கமாட்டார்'' என்றார்.

கூட்டத்திற்குத்தலைமை வகித்த புத்தளம் பாராளுமன்ற உறுப்பினரும் உதவி நீதி அமைச்சருமான எம். எச். எம். நயினாமரிக்காயர் பேசுகையில், ''இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், [illegible] போரும் இந்நாட்டின் [illegible] என ஒப்புக்கொண்டது தேசிய அரசாங்கமே! நாம் [illegible]ன்பட்டால் உண்டுவாழ்வு. பிளவுபட்டால்அனைவர்க்கும் தாழ்வே! ''என்றார் மற்றும். பலரும் பேசினர்.

# தமிழறிஞர் கி. வா. ஜ. வுக்கு 'சைவபூஷணம்' பட்டம்

## சைவப் புலவர் மகாநாட்டில் வழங்கப்பட்டது

கண்டி, திங்கள்— அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் ஆறுவது சைவப்புலவர் மகாநாடு கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது. பட்டமளிப்பு, நூல் வெளியீடு, கருத்தரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜெகந்நாதனுக்கு 'சைவபூஷணம்' என்ற பட்டத்தை இலங்கை சர்வகலாசாலை விரிவுரையாளர் சிவ ஸ்ரீ த. கைலாசநாதக் குருக்கள் வழங்கினார். திரு. த. குமாரசாமிப் புலவருக்கு 'சைவப்புலவர் மணி' என்ற பட்டமளிக்கப்பட்டது. திருவாளர்கள் நம. சிவப்பிரகாசம்' வே. சங்கரப்பிள்ளை, ச. சச்சிதானந்தம், சி. திருநாவுக்கரசு ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர். பட்டமளிப்பு நிகழ்ச்சிகளுக்கு திரு. சு. வித்தியானந்தன் தலைமை வகித்தார்

இதனையடுத்து சைவப்புலவர் பட்டமளிப்பு வைபவத்துக்கு வித்துவான் திரு. வ. செல்லையா தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையில்,' பாடசாலைகளில் மாணவர் இப்போது நாஸ்திகம் பேசுகின்றனர். சைவச் சிறுவர் தகாத நெறியிற் செல்கின்றனர். அவர்கள் வாழ்க்கை மிளிர, வளம் பெற, சைவச் சீலர்களாக வாழ நாம் முன்மாதிரியாகத் திகழ வேண்டும். நால்வர் நெறியையும், நாவலர் வழியையும் நாம் பேணச் சைவ நிறுவனங்கள் பெயரளவில் அன்றிச் செயலளவில் ஆக்கவூக்கம் அளிக்கவேண்டும்' என்றார். பண்டிதர் திரு. இ. செல்லத்துரையின் 'உண்மை நெறிவிளக்கம்' நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெற்றது.

கலைமகள் ஆசிரியர் வித்துவான் திரு. கி வா' ஜகந்நாதன், பண்டிதை திருமதி கங்கேஸ்வரி கந்தையா, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, புலவர் வை. சித்திவிநாயகம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

## வடபகுதிக்கு மேலும் சமாதான சபைகள்

கொழும்பு, திங்கள் யாழ்ப்பாணம், வவனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் மேலும் 9 சமாதான சபைகள் நியமிக்கப்படவிருக்கிறது.

இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு நீதி அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. டி. ஜே, ஆர். குணவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு இந்த வாரத்தில் வரவிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் சமாதானசபைகள்மிகவும் நல்லமுறையில் இயங்கிவருவதாகவும்இதனால் நீதிமன்றத்துக்குசெல்லாதவாறுபலசச்சரவுகள் சுமுகமாகத்தீர்க்கப்பட்டதாகவும் நீதி அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இன்று நடைபெறும் 5-வது மகாநாடு

யாழ்ப்பாணம், செவ் ஐக்கிய இலங்கை தோட்ட ஸ்தாபன தொழிலாளர் சங்க யாழ்ப்பாண மாவட்ட கிளையின் 5-வது மகாநாடு இன்று பிற்பகல், யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறும். இம்மகாநாட்டிற்கு தாய்ச் சங்க உப-தலைவர் திரு. வ. நட்சேத்திரம் தலைமை வகிப்பார்.

## யாழ்ப்பாணத்தில் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பாணம்' நிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்யப்படும்.

இம்மாதம் 9-ந்திகதி நகர மண்டபத்தில் 'குதூகலம்' வளர்கலை அரங்க நிகழ்ச்சிகள் மாலை 6 மணிதொடக்கம் 9-மணிவரை ஒலிப்பதிவு செய்யப்படும்.

இந் நிகழ்ச்சிக்கான நேர்முகப்பரீட்சை இன்றும் நாளையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறும். இளம் கலைஞர்கள் இதில் பங்கு கொள்ளலாம்.

காங்கேசன்துறை

## இறங்கு துறைவேலைகள் ஆரம்பமாகும்

மாவிட்டபுரம், திங்கள் உதவி உணவுக் கமிஷனர் திரு. செனநாயகா காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு விஜயஞ்செய்து துறைமுக இறக்குமதி வேலைகளைப் பார்வையிட்டுத் திருப்திதெரிவித்தார். உதவிக் கமிஷனருடன் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு கே. சிவப்பிரகாசமும் வந்திருந்தார்.

வடபகுதிக்கு மேலும் பல கப்பல்களை அனுப்புவதற்கு இங்கு போதிய குதவசதிகள் இல்லாதிருக்கின்றதெனவும் உதவிக் கமிஷனர் குறிப்பிட்டார். மேலும் அவர் வடபகுதிக்குக் கப்பல்களை அனுப்புவதினால் அரசாங்கத்துக்கு அதிக இலாபமுண்டு என்றும் காங்கேசன்துறை இறங்குதுறை வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென்றும் கூறினார்,

## லண்டன்செல்கிறார்

யாழ்ப்பாணம், செவ் இலங்கைப் பல்கலைகழக உதவி விரிவுரையாளர் திரு ஆர். நித்தியானந்தன் பல்கலைக்கழக உபகாரச்சம்பளத்திட்டத்தின் கீழ் உயர் கல்வி பயிலுவதற்காக இம்மாதம் ஒன்பதாம் திகதி லண்டன்செல்லவிருக்கிறார்.

இரசாயனசாஸ்த்திரத்தில் கலாநிதிப்பட்டம்பெறுவதற்காக இவர் அங்கு செல்கிறார். இலங்கைப் பல்கலைக்கழகஉப ''வார்டனாக''விருக்கும் திரு. ஆர் நித்தியானந்தன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழையமாணவராவார்.

## கலைவிழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ் பருத்தித்துறைமெதடிஸ் மகளிர் உயர்நிலைப்பாடசாலையில் நடைபெறும் வடமாராட்சிப்பிரதேச கலைமன்றக் கலைவிழா இன்றையநிகழ்ச்சிகள்:-

நாதஸ்வரக்கச்சேரி, நடனங்கள், பாட்டு திரு, எஸ் திலகநாயகம்போல். தலைமைப்பேருரை திரு.வேணன் அபயசேகரா. பாட்டு-திரு. அல்வின்தேவசகாயம். பாட்டு-இசைப்புலவர் ந. சண்முகரத்தினம். சிலம் பொலிவில்லுப்பாட்டு- திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம். மன்றக் இசைத்தல்.

## இலவச வெளியீடு

நல்லூர் முருகன் பேரில் திரு. சீ. விஞசித்தம்பி எழுதியுள்ள முருகநாம பாடலை அச்சுவேலி சிவகுமாரன் அச்சகத்தார் இலவச வெளியீடாக வெளியிட்டுள்ளனர்.


## தீர்ப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் புரட்டாதி மாதம் 7-ம் திகதி (7-9-66) புதன்கிழமை காலை 10 மணிக்கு வரும் சுபவேளையில் பண்டத்தரிப்பு சந்தைக்கு எதிரில் அமைந்திருக்கும் புதிய கட்டிடத்தில் எமது,

'ப. ஜேம்ஸ்'

பலசரக்கு வியாபாரத்தைத் தொடக்கிவைக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சமூகமளித்து எம்மை மகிழ்விக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
ப. ஜேம்ஸ்

பண்டத்தரிப்பு,
5-9-66.

960


இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேல் [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966 [illegible] செப்டெம்பர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org